Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவச பிரதி

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை–08 | 23–11–2005 | புதன்கிழமை | ஓசை–279

உலகில்
215 நாடுகளையும், ... 
50 000 க்கும் மேற்பட்ட ...
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பி...
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

# ஆயுதப்படைத்தரப்பு, புலனாய்வுப்பிரிவு, கட்டமைப்பை மறுசீரமைக்க முடிவு

## புதிய சனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

**சிறீலங்காவின் புலனாய்வுப்பிரிவு பொலிஸ் தலைமையகம் இரகசிய பொலிஸ் பிரிவு, இராணுவம் ஆகிய படைப் பிரிவுகளில் வெகுவிரைவில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சனாதிபதி மகிந்தராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக அரசாங்கத்தின் உயர் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.**

கடந்த காலங்களில் இந்தப் படை அமைப்புக்களில் இருந்த உயரதிகாரிகள் அரசாங்கத்தை திசைதிருப்பும் வகையிலான அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்கள் என்று அரச உயரதிகாரிகளுக்கு தெரிவந்துள்ளது. சில அதிகாரிகள் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் இயங்கும் பாதாள உலககுழுவினருடன் தொடர்பு கொண்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் சில அதிகாரிகள் பற்றியும் தெரிய வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை பொலிஸ்துறையை மறுசீரமைப்பதற்கான திட்டங்களைத் தயாரிக்குமாறு மகிந்தராஜபக்ஷ பொலிஸ் உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை பொலிஸ்ஆணைக் குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது.

இந்த ஆணைக்குழுவிற்கு புதிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடுக்குளம் வான்பாய்கிறது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்திலிருந்து செக்கனுக்கு 13150கன அடிநீர் வெளியேறிக்கொண்டிருப்பதாக நீர்ப்பாசனத்திணைக்களத்தினர் தெரிவித்தனர். பலவருடங்களின் பின் இரணைமடுக்குளம் வான் (12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

கடற்புலிகளின் முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை பத்து மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக முல்லை. மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் நீடிப்பு

சிறிலங்காவின் புதிய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கக்கூடும் என்று தெரிகிறது.

எதிர்வரும் 25 ஆம் திகதி கூடும் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் மகிந்தவின் விசேட உரைக்குப் பின்னர் அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளி,முல்லை. மாவட்டத்தில் பல கிராமங்கள் வெள்ளத்தில்மூழ்கின; மக்கள் இடம்பெயர்வு



(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பகுதியில் பெய்துவரும் தொடர் மழையால் கிளி, முல்லை. மாவட்டங்களில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. 24157 இற்கும் அதிகமான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. இரண்டு மாவட்ட அரச அதிகாரிகளும் உடனடி உதவிகள் தேவை எனவும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக கிளிநொச்சிமாவட்டத்தில் 6697 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன என மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:-

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரசஅதிபர் பிரிவுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.வெள்ளநீரின் அதிகரிப்பால் மக்களின் குடிமனைகளில் இருக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் பூநகரி உதவி அரச அதிபர்பிரிவில் 792 குடும்பங்களும், கரைச்சி உதவிஅரச அதிபர்பிரிவில் 2466குடும்பங்களும், கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் 2929 (12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவைப் பதவியேற்பு ஒத்திவைப்பு; பலரைப் பதவி நீக்கவும் மகிந்த முடிவு!

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய அமைச்சரவைப்பதவி ஏற்பது நேற்றும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்று புதிய அமைச்சரவை பதவியேற்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

இதனிடையே தனது முன்னைய அமைச்சர்கள் 35 பேரில் பத்துப் பேரை நீக்கவும் மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

டிலான் பெரேரா, பீலிக்ஸ் பெரேரா, ஜீவன் குமாரதுங்க, திஸ்ஸ கரலியத்த, மில்றோய் பெர்னாண்டோ உள்ளிட்ட பத்துப் பேரை அழைத்த மகிந்த தமது அமைச்சரவையின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைக்கவுள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி.இற்கும் மகிந்தவுக்கும் இடையே முக்கிய அமைச்சுப் பொறுப்பு தொடர்பாக முறுகல் ஏற்பட்டிருப்பதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த முறுகலுக்குத் தீர்வு காண்பதற்காகவே இரண்டாவது முறையாக அமைச்சரவைப் பதவியேற்பு நேற்றும் ஒத்திவைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## சுகாதார சேவை ஊழியர்களை இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கு அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுகாதார சேவையுடன் தொடர்புடைய அனைத்து அரச மற்றும் தனியார் வைத்திய சேவை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் தங்கள் இடங்களுக்கு அருகிலுள்ள இடம் பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள முகாம்களில் பணிபுரிய வருமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேற்படி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தொற்று நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகாது முன்னேற் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை விட்டு வெளியேற ரணில் விக்கிரமசிங்க முடிவு

*– மேற்படிப்புக்கு லண்டன் செல்கிறார்*

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்துவிட்ட ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராக உள்ள ரணில் விக்கிரமசிங்க விரைவில் சிறிலங்காவைவிட்டு வெளியேறவுள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.இங்கிலாந்தில் முனைவர் பட்டப்படிப்பை ரணில் மேற்கொள்ள உள்ளதாகவும், ரணில் தனது துணைவியாருடன் சனவரி மாதத்தின் தொடக்கத்தில் சிறிலங்காவிலிருந்து வெளியேறுவார் என்றும் கூறப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து ரணிலை விலக்க அல்லது ரணில் விலக முடிவு செய்த நிலையில் தலைவராக கருஜயசூரிய நியமிக்கப்படுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.




## மாவீரர் நாள் நவம்பர் – 27

**"மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கு மேலாக தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமைகொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமாகிவிட்டார்கள்."**

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.




ELECTRONIC DIVERSITY VISA ENTRY FORM

Part One - Applicant Information

**அமெரிக்கன் விசா 25% கட்டணம் (க ழி வு)**

**காசுக் கட்டளை தேவையில்லை!**
**கொழும்பு செல்லத் தேவையில்லை!!**

*வருடந்தோறும் அமெரிக்க அரசினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு 55000 பேருக்கு வழங்கப்படும் வதிவிட விசாவுக்காக பலர் விண்ணப்பிக்கின்றனர். தாங்களும் தங்கள் அதிர்ஷ்டத்தை பரிசீலிக்க கார்த்திகை 30ஆம் திகதிக்கு முன் உங்கள் விண்ணப்பங்களை அனுப்ப*

2"x2" கலர் படம் ஒன்றுடன்
எமது நிறுவனங்களுக்கு உடன் சமூகம் தரவும்.

தொடர்புகளுக்கு:
**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

(சி-13226)


## அறிவித்தல்

கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்நோக்கும் கால்நடை பராமரிப்புக்கஸ்ரங்களினாலும், தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாகவும் பால்உற்பத்தி குறைவாக உள்ளதால் பால்கொள்வனவு கடந்த 20.11.2005ஆம் நாளிலிருந்து 31.12.2005 ஆம் நாள்வரைக்கும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் 01.01.2006ஆம் நாளிலிருந்து பால்கொள்வனவு மேற்கொள்ளப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பொறுப்பாளர்,*
*த.பொ.மே. நிறுவனம்,*
*கிளிநொச்சி மாவட்டம்*

(6994)

### நல்லூர் பிரதேசசபை சந்தைகள் குத்தகைக்கு விடுவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் - 2006

28.10.2005, 09.11.2005ஆம் திகதிய உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் செய்யப்பட்ட விளம்பரங்களுக்கு அமைவாக பின்வரும் சந்தைகளை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி என்னால் கோரப்படுகின்றது.

| விபரம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (Vat தவிர்ந்தது) |
|---|---|
| 01.திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | ரூபா 4107075.00 |
| 02. கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன் | ரூபா186165.00 |

**கேள்விப்பத்திரம் வழங்கும்திகதி 29.11.2005 செவ்வாய் மு.ப.12.00 மணிவரை.**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி 30.11.2005 புதன் மு.ப. 12.00மணிவரை.**

**கேள்வி திறக்கும் திகதி 30.11.2005 புதன் பி.ப 2.00 மணி .**

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமைஅலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொன்னையா வைரமுத்து,**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**

*நல்லூர் பிரதேச சபை.*
*திருநெல்வேலி.* (சி-13373)

## துயர் பகிர்கின்றோம்

கிளிநொச்சி மாவட்டச்செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பிரதம எழுதுநராகக் கடமையாற்றி நேற்று (2005.11.22) இயற்கை எய்திய

### அமரர் திரு. இ. அரசகேசரி

அவர்களது மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியுறும் அவவேளை அன்னாரது குடும்பத்தாரின் துயரிலும்பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:-

**அரச அதிபரும் உத்தியோகத்தர்களும்**
**மாவட்டச்செயலக வளாகம்**
**கிளிநொச்சி.**

(6948)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான**

## கேள்வி அறிவித்தல் - 2006

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 2006.01.01 ஆம் திகதி முதல் 2006.12.31 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவ கட்டணம் | - | ரூபா 300.00 (வற்வரி நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகம் | - | 06.12.2005 பிற்பகல் 12.30 வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | 06.12.2005 பிற்பகல் 2.00வரை |
| கேள்வி திறத்தல் | - | 06.12.2005 பிற்பகல் 2.30 |

விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து கடித உறையின் இடது பக்கமேல்மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகர சபை இறைவரிப்பகுதியிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்ப்பித்தல்வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் "மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு 2005.12.06 செவ்வாய்கிழமை பி.ப.12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு:-

01. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையின்50% இற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி உத்தரவாதமுறி சமர்ப்பித்தல் வேண்டும்.
02. சந்தைகளைக் குத்தகைக்கு பெறுபவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பொறுமதியின் 3%இற்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
03. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 2.00 உம் மோட்டார்சைக்கிளுக்கு ரூபா 4.00 உம் மேலதிகமாக பாதுகாப்புவரி அறவிடக்கூடாது.
04. தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரி (வற்) செலுத்தப்படல் வேண்டும்.
05. இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கான மாதாந்தவாடகை செலுத்தப்படல்வேண்டும்.
06. ஜின்னா வீதியில் இருந்த இறைச்சிக்கடைகளுக்குப் பதிலாக மானிப்பாய் வீதியில் தனியார் காணியில் இறைச்சிக்கடைகள் நடாத்த அனுமதி வழங்கப்படும். எனினும் இடத்தைக் குத்தகைக்காரரே தெரிவுசெய்யவேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
07. பாசையூர் பகுதியில் உள்ள இறைச்சிக்கடைகள் இராணுவ காவலரண்களுக்குள் அமைந்திருப்பதால் குத்தகைக்காரரே இடத்தைத் தெரிவுசெய்யவேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

### அட்டவணை

| தொ. இல. | பொதுச்சந்தைகள் | | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (15%பெறுமதிசேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை | | 10000.00 | 1698000.00 |
| 02. | பெரியகடை மரக்கறிச்சந்தை | | 10000.00 | 577900.00 |
| 03. | குருநகர் சந்தை | | 10000.00 | 942700.00 |
| 04. | செங்குந்தா சந்தை | | 10000.00 | 532940.00 |
| 05. | நாவாந்துறை சந்தை | | 5000.00 | 288000.00 |
| 06. | பாசையூர் சந்தை | | 2500.00 | 43175.00 |
| 07. | அரியாலைச்சந்தை | | 2500.00 | 70001.00 |
| 08. | புங்கங்குளம் சந்தை | | 2500.00 | 3300.00 |
| 09. | கொழும்புத்துறை சந்தை | | 1000.00 | 16500.00 |
| 10. | கஸ்தூரியார் வீதியிலுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | | 2500.00 | 41000.00 |
| | **இறைச்சிக்கடைகள்** | | | |
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 2500.00 | 72000.00 |
| 02. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 03 | 2500.00 | 61950.00 |
| 03. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 04 | 2500.00 | 94600.00 |
| 04. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 05 | 2500.00 | 41000.00 |
| 05. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 06 | 2500.00 | 41590.00 |
| 06. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 08 | 2500.00 | 28200.00 |
| 07. | பண்ணை கருவாட்டுக்கடை | இல. 02 | 2500.00 | 23100.00 |
| 08. | பண்ணை கோழிக்கடை | இல. 07 | 2500.00 | 38750.00 |
| 09. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 2500.00 | 108400.00 |
| 10. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல. 02 | 2500.00 | 128050.00 |
| 11. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 2500.00 | 185750.00 |
| 12. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல. 02 | 2500.00 | 36000.00 |
| 13. | புங்கங்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 2500.00 | 155000.00 |
| 14. | புங்கங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல. 02 | 2500.00 | 40400.00 |
| 15. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 2500.00 | 162000.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 02 | 2500.00 | 113000.00 |
| 17. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 03 | 2500.00 | 65000.00 |
| 18. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 04 | 2500.00 | 60000.00 |
| 19. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 05 | 2500.00 | 40000.00 |
| 20. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 06 | 2500.00 | 25000.00 |
| 21. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 07 | 2500.00 | 25000.00 |
| 22. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 08 | 2500.00 | 10000.00 |
| 23. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 09 | 2500.00 | 10000.00 |
| 24. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல. 10 | 2500.00 | 6800.00 |
| 25. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 11 | 1000.00 | 3900.00 |
| 26. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 12 | 1000.00 | 3900.00 |
| 27. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 5000.00 | 335005.00 |
| 28. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 02 | 5000.00 | 201150.00 |
| 29. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 03 | 5000.00 | 150000.00 |
| 30. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 04 | 5000.00 | 172410.00 |
| 31. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 05 | 5000.00 | 214750.00 |
| 32. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 06 | 5000.00 | 222650.00 |
| 33. | குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | இல. 07 | 2500.00 | 80600.00 |
| 34. | நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 5000.00 | 275000.00 |
| 35. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 2500.00 | 70300.00 |
| 36. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல. 02 | 2500.00 | 111700.00 |
| 37. | முஸ்லிம்கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | | 2500.00 | 28700.00 |

**சி.வி.கே. சிவஞானம்,**
**ஆணையாளர்,**
**மாநகர சபை யாழ்ப்பாணம்.**

(சி13372)

# இஸ்ரேல் பிரதமர் திடீர் இராஜினாமா

## பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல்



(ஜெருசலேம்)

**இஸ்ரேல் பிரதமர் ஏரியல்ஷரோன் ஆளும் கட்சியில் இருந்து திடீரென்று இராஜினாமாச் செய்துள்ளார். பாராளுமன்றத்தைக்கலைத்து முன்கூட்டியே தேர்தல் நடத்தவும் அவர் அதிபரிடம் சிபாரிசு செய்திருக்கிறார். அவர் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார்.**

இஸ்ரேலில் பிரதமர் ஏரியல்ஷரோன் தலைமையில் லிக்குட் கட்சி ஆட்சியில் இருந்து வருகிறது. கடந்த 30 ஆண்டுகளாக இவர் அந்தக் கட்சியில் தீவிரமாக செயற்பட்டார்.

இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அமைதி முயற்சியின் ஒரு பகுதியாக காஸாப் பகுதியில் இருந்து யூதக்குடியிருப்புக்களையும் இஸ்ரேல் இராணுவத்தையும் இவர் விலக்கிக்கொண்டார்.

இது அவரது ஆளும் லிக்குட் கட்சியில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. இதனால் அதிருப்தியடந்த ஏரியல்ஷரோன் லிக்குட் கட்சியில் இருந்து விலகினார். சனாதிபதி மோஷிகாத்சேவை சந்தித்து கட்சியில் இருந்து விலகுவதாகவும் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் புதிதாகத் தேர்தல் நடத்தவும் சிபார்சு செய்து கடிதம் வழங்கியுள்ளார்.ஏரியல்ஷரோன் புதிய கட்சி ஒன்றையும் தொடங்க இருக்கிறார். லிக்குட் கட்சியில் இருந்து 14 பா.உக்கள் விலகி ஏரியல் ஷரோனின் புதிய கட்சியில் சேரத்திட்டமிட்டுள்ளனர்.

ஷரோன் இராஜினாமாவை தொடர்ந்து இஸ்ரேலில் அரசியல் குழப்பம் உருவாகியுள்ளது. அங்கு பாராளுமன்றத்தைக் கலைத்து அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தேர்தல் நடத்துவது பற்றி அதிபர் காத்சேவ் ஆலோசனை நடத்துவதுடன் வேறு ஒரு கட்சியைச் சேர்ந்த தலைவரை புதிய ஆட்சி அமைக்க அழைக்க முடியுமா என்றும் அதிபர் ஆலோசித்து வருகிறார்.

# பிணவாடை வீசும் அபூர்வ மலர்



அமெரிக்கா வோஷிங்டன் நகரில் உள்ள தாவர இயல் பூங்காவில் காணப்படும் "டைட்டான் ஆரம்" என்ற பூ தான் மிக உயரமான மலர், பார்க்க அழகாக இருக்கும். இந்த மலரில் நறுமணம் வீசாது. பிண வாடைதான் வீசும். இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே மலரும் இந்த மலர். இரண்டே நாளில் வாடிவிடும். மூக்கைப் பிடித்துக்கொண்டே மக்கள் இந்த மலரைப் பார்வையிடுவதுண்டு.




பொலிவியா நாட்டில் பொதுத்தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

# அல்கைறதா தலைவர் கொல்லப்பட்டாரா?

## அமெரிக்கா விசாரித்து வருகிறது



(வோஷிங்டன்)

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் அந்த நாட்டு அல் ஹைய்தா தலைவர் அல்-ஜர்க்காவி கொல்லப்பட்டு இருக்கலாம் என்று நம்பப் படுகிறது.

மொசூல் நகரில் அமெரிக்க இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.இதில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியானார்கள். இப்படி கொல்லப்பட்டவர்களில் அல்-ஜர்க்காவியும் ஒருவர் என்று கூறப்படுகிறது. இது உண்மைதானா என்று அமெரிக்க அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஜர்க்காவி இறந்தது உண்மை என்றால் அது அமெரிக்காவுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி எனத் தெரிவிக்கப்படுகிறது. சனியன்று நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஒருபெண் உட்பட எட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

35 வயதிற்கு மேற்பட்ட இவர் ஜோர்தான் நாட்டைச் சேர்ந்தவர். அந்த நாட்டைச் சேர்ந்த நீதிமன்றம் அவருக்கு 2002 ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்திருந்தது. ஆனால் அவர் தலைமறைவாக இருந்ததால் இந்தத்தண்டனையை நிறைவேற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

# பிரதமர் பதவி தொடர்பாக கென்யாவில் கருத்துக்கணிப்பு

கென்யாவில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புத் தொடர்பான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.இது புதிய பிரதமர் பதவியை உருவாக்கக் கூடிய அரசியல் யாப்புடன் தொடர்புடைய கருத்துக் கணிப்பாகும்.

கருத்துக்கணிப்பின் முதற்கட்ட பெறுபேறுகளின்படி அதனை ஆட்சேபிப்பவர்களே முன்னிலையில் திகழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.கென்ய சனாதிபதியின் அரசாங்கம் புதிய யாப்பை ஆதரிக்கின்றது. அதை எதிர்ப்பவர்கள் கூடுதல் அதிகாரங்களைக் கோரிநிற்கின்றார்கள்.

இந்த யாப்பு தொடர்பான நகல் ஆவணத்தைக் கென்யாவின் 39 தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள் நிராகரித்துள்ளனர். அந்த நாட்டில் 68 தேர்தல் தொகுதிகள் உள்ளன.


# சிறுவர்களைப் பாதிக்கும் ஹோமோன்கள்

(வோஷிங்டன்)


இளம் பராயத்தில் புறக்கணிக்கப்பட்ட சிறுவர், சிறுமியர் உடல் உள ரீதியான வடுக்களை எதிர் கொள்கின்றார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குழந்தையைப் பராமரிப்பவர் குறைவாக அன்பைச் செலுத்தும்போது சமூகப் பிணைப்புக்களை ஏற்படுத்தக் கூடிய ஹோமோன்களின் உற்பத்தி தடைப்படுவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இரு ஹோமோன்களை அடிப்படையாக வைத்து நடத்திய ஆராய்ச்சியின் மூலம் இந்த விடயம் புலனாகியுள்ளது.

அநாதை இல்லங்களில் வளர்க்கப்பட்ட சிறுவர்களில் ஹோமோன் மட்டம் குறைந்திருந்தது. இதன் பின் விளைவுகள் சிலகாலம் நீடிக்கக் கூடியவை என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



அவுஸ்திரேலியப் பிரதமர் ஜான்ஹவார்டு முதன்முறையாக ஆப்கானிஸ்தான் சென்றுள்ளார். அங்கு பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்.



பிரான்சிலிருந்து அணுக் கழிவுகளை ஏற்றிக்கொண்டு ஜேர்மன் செல்லும் புகையிரதம்

# ஈரானின் அணுசக்தித்திட்டம் பாதுகாப்புச்சபையில் பிரஸ்தாபிப்பது பிற்போடப்படலாம்

## இராஜதந்திரிகள் தெரிவிப்பு

ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் பிரஸ்தாபிக்கும் முயற்சிகளை அமெரிக்காவும் மூன்று ஐரோப்பிய நாடுகளும் பிற்போட இருப்பதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அணுவாயுதக் கண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணுசக்தி ஸ்தாபனம் நாளை வியன்னாவில் கூட இருக்கின்றது.

ஈரான் இரகசிய அணுவாயுதங்களை தயாரிக்க முயல்கின்றது என்று மேற்குலக நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

ஈரானிய அரசாங்கம் குற்றச்சாட்டை மறுத்து வருகின்றது. இந்நிலையில் தமது பிரச்சினை பாதுகாப்புச் சபையில் பிரஸ்தாபிக்கப்படுமானால் யுரேனிய விரிவாக்கல் திட்டத்தை முன்னெடுத்துச் சென்று ஐக்கிய நாடுகள் அதிகாரிகளுடனான ஒத்துழைப்பை நிறுத்தப் போவதாக ஈரான் அறிவித்துள்ளது.

# உலகில் வித்தியாசமான மிருகக் காட்சிசாலை

வனவிலங்குகளைப் பார்ப்பதற்கு வசதி ஏற்படுத்தித் தரும் மிருகக்காட்சிச் சாலைகளில் வித்தியாசமான ஒன்று தாய்லாந்தில் உருவாகி வருகிறது.

இங்கு விலங்குகளைப் பார்ப்பதற்கு மட்டுமல்ல ருசிப்பதற்கும் வசதி செய்யப்படும். சியாங் மாஸ் நைட் சபாரி மிருகக்காட்சிச் சாலையில் வருகிற புத்தாண்டு முதல் விடுதி தொடங்கப்படவுள்ளது.

இங்கு வரும் விருந்தினர்கள் 5500 ரூபாய் கொடுத்தால், நாய்க்கறி முதல் ஆபிரிக்கச் சிங்கக்கறி வரை சாப்பிடலாம்.

இதேவேளை மிருகக்காட்சிச்சாலையில் விடுதி தொடங்குவதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இது மிருகங்களை கறிக்காக கடத்துவதை அதிகரிக்கச் செய்யும் என்று விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கமே, அவற்றை கறியாக்கி உணவாகப் படைப்பது கண்டிக்கத்தக்கது என்று அந்தநாட்டு வனவிலங்குகள் பாதுகாப்புச் சங்கம் கண்டித்துள்ளது.

# போராட்டம்

பங்களாதேஷில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.இரண்டாவது நாளாக நேற்றும் இப்போராட்டம் தொடர்ந்ததால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பேருந்து போக்குவரத்து ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் ஒருவரை கைது செய்யப்பட்டமைக்கு அரச ஆதரவு பேருந்து உரிமையாளர்கள் ஒத்துழைப்பதற்கு எதிராக இந்த வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெள்ள அபாயத்தினுள் மக்கள்

# மனிதநேய அமைப்புக்கள் உதவுக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அழைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

**வடக்கு – கிழக்கில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய உதவிகளைச் செய்ய முன்வருமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனைத்து மனிதநேய அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.**

இதுகுறித்துஅது வெளியிட்டுள்ள அழைப்பில்:- வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாகப்பெய்து வரும் அடை மழையினால் பெருமளவு மக்கள், வெள்ள அபாயத்தினுள் சிக்குண்டும், இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வரும் மக்கள்,போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்காலிக குடிசைகளில் வசித்து வரும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, கரைச்சிக் குடியிருப்பு, புதுக்குடியிருப்புப் பிரதேசங்கள் கண்டாவளைப் பிரதேசம் கிளிநொச்சி நகர்ப்பகுதி, முறிகண்டிப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கின்றனர். மற்றும் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வெள்ள அபாயத்திற்குள் சிக்குண்டுள்ளன.

வன்னியில் பெரும் குளங்கள் யாவும் நீர் நிறைந்து வெளியேற ஆரம்பித்துள்ளதால் அடுத்த ஒரு சில தினங்களிற்குள் வெள்ள அபாயம் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு வெள்ள அபாய இடங்களில் செயற்படத் தொடங்கியுள்ளது.

- ☐ மக்களைபாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துதல்
- ☐ இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குதல்
- ☐ போக்குவரத்து வசதிகள், சுகாதார குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- ☐ பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள வெள்ளத்தினை மற்றும் தடைகளை நீக்கி வெள்ள அபாயத்தைக் குறைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மீட்புப் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொண்டர்கள் பொது நிறுவனங்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். கூரை விரிப்புக்கள், நில விரிப்புக்கள், உணவல்லாத பொருட்கள் சுத்திகரிப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான வசதிகள், தற்காலிகமாக அமையக் கூடிய மலசலகூட வசதிகள், உணவுமற்றும் மருத்துவ சுகாதாரம குழந்தைகளுக்கும், பெண்களுக்குமான பாவனைப் பொருட்கள் உடனடியாக தேவைப்படுகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் பல உள்ளூர் நிறுவனங்கள் பணி புரிகின்றன. யுனிசெப், எஸ்.சி. ஒவ், யு.என்.எச்.சி.ஆர் போன்ற அமைப்புக்களும் தம்மாலான பணிகளை ஆற்றி வருகின்றன. எனினும் அனைத்து தொண்டு நிறுவனங்களையும், மனிதாபிமான அமைப்புக்களையும், ஒன்றிணைத்து கைகோர்த்து தவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேகமாக வந்த டிப்பர் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டது



(அலுவலகசெய்தியாளர்)

பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் தடம் புரண்ட சம்பவம் நேற்று முன்தினம் ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

அதிகாலை 4.30 மணியளவில் பரந்தன் பழைய தபாலகத்திற்கு அருகில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; மழை பொழிந்து கொண்டிருந்த சமயம் கிளிநொச்சி நோக்கி வாகனம் வேகமாக வந்து கொண்டிருக்கையில் வீதிக்கு குறுக்காக கால் நடை கள் படுத்திருந்ததைக் கண்ட சாரதி வாகனத்தின் வேகத்தை திடீரென குறைக்க முற்பட்ட போது வாகனம் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் திரும்பிய தோடு தடம்புரண்டது. எனினும் உயிர்ச்சேதம் எதுவும்ஏற்படவில்லை.(லோ.தீ)

## தாலிக்கொடி கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைப்பு

(அலுவலக செய்தியாளர்)

தாலிக்கொடியொன்று கண்டெடுக்கப்பட்டு அன்றைய தினமே உரியவரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றது.

சம்பவதினம் கிளி.கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த த.தயாவாணி என்பவர் சிகிச்சை பெறும் பொருட்டு மாவட்ட வைத்திய சாலைக்குச் சென்ற சமயம் வைத்தியசாலை வளாகத்தில் வைத்துஐந்தேமுக்கால் பவுண் தாலிக் கொடியினை கண்டெடுத்து வைத்தியசாலையில் கடமை புரியும் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளார். அன்றைய தினம் மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தந்து தாலிக்கொடியினை தவறவிட்டவரான இரத்தினபுரத்தைச் சேர்ந்த சுவினோ தினி என்பவர் வைத்தியசாலை காவல்துறையினிடம் முறையிட்டு அதற்குரிய ஆவணங்களையும் கையளித்ததைத் தொடர்ந்து காவல்துறையினரால் தாலிக்கொடி உரியவரிடம் கையளிக்கப்பட்டது. தயாவாணியை வைத்தியசாலை நிர்வாகத்தினர் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## பனம் விதை நடுகைத் திட்டம் கல்லாறு கிராமத்தில் அமுல்

பத்தாயிரம் பனம் விதை நடுகைத் திட்டம் வன்னியில் ஆரம்பமாகியுள்ளது. கண்டாவளை செயலர் பிரிவில் உள்ள கல்லாற்றுக் கிராமத்தில் பனை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியுதவியுடன் பனம் விதை நடுகைத்திட்டம் இடம் பெற்றுள்ளது. இந்த நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

பத்தாயிரம் பனம் விதைகளை நடுகை செய்வோம் என்ற திட்டத்தின் கீழ் பன்னிரண்டாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ நிர்வாக சேவை துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், கரைச்சிப் பிரதேச செயலர் குலேந்திரன், கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இபத்மநாதன் மற்றும் சேவாலங்கா பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பனம் விதைகளை நடுகை செய்தனர்.

இதே வேளை உமையாள்புரம் கிராமத்திலும் 20 ஆயிரம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. பூநகரி செயலர் பிரிவில் ஞானிமடம், சித்தன் குறிச்சி, கறுக்காய்த்தீவு ஆகிய இடங்களிலும், பளைப் பிரதேச செயலர் பிரிவில் இயக்கச்சி, புலோப்பளை, மாசார் ஆகிய பிரதேசங்களிலும் பனம் விதை நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச்சபை இணைப்பாளர் வி.கே மாணிக்கம் தெரிவித்துள்ளார்.

## செம்பியன்பற்று உப பணிமனைக்கு மலக்கழிவு அகற்றும் வாகனம்

வடமராட்சி கிழக்கு இடைத் தங்கல் முகாம்களில் உள்ள மலசலகூடக் குழிகளின் சுத்திகரிப்புக்காக புதிய மலகூடக் கழிவு அகற்றும் வாகனம் பருத்தித்துறை பிரதேச சபையினரால் செம்பியன்பற்று உபபணிமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காலம் நிலவிய பிரச்சினைக்கு இதனால் முற்றுப் புள்ளி வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நெடுங்கேணி பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

நெடுங்கேணி பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நெடுங்கேணி அரசியல்துறைப் பொறுப்பாளர் தெ.இந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பொதுச் சுடரினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம், நெடுங்கேணி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த குகதாஸ் ஏற்றி வைக்க, முதல் மாவீரர் லெப். சங்கரின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை வவுனியா மாவட்ட மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் ஆனந்தன் ஏற்றி வைத்தார். திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை நெடுங்கேணிப் பிரதேச மகளிர் பொறுப்பாளர் அன்பு அணி வித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பொதுத் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரர் மதுவந்தியின் தாயார் ஏற்ற, மலர் மாலையினை வவுனியா மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பிறைசூடி அணி வித்தார். அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

தொடர்ந்து மகாவித்தியாலய மாணவி த.லீர்த்திகாவின் மாவீரர் நடனம் இடம்பெற்றது.

வரவேற்புரையினைத் தொடர்ந்து தலை மையுரையினை தெ.இந்திரன் வழங்கினார்.

நினைவுரையினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆவர்தனா, ஞானம், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சேனைக் சூசை, தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கினர். அடுத்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு மதியபோசனம் வழங்கப்பட்டது.

## தமிழர் தாயகமெங்கும் மாவீரர் வாரம் எழுச்சியுடன் ஆரம்பம்


(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகமெங்கும் மாவீரர் வாரம் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பொது அமைப்புக்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், விடுதலைப் புலிகளின் பாசறைகள் ஆகியவற்றில் விசேடமாக அமைக்கப்பெற்ற அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரதான வீதிகள் எங்கும் இருமருங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சியளிப்பதுடன் மாவீரர்களை சித்தரிக்கும் பதாகைகளும் கட்டப்பட்டு வருகின்றன. முக்கிய சந்திகளில் மாவீரர்களின் சிந்தனைகளை பறைசாற்றி நிற்கும் பாரிய அலங்கார வளைவுகளும், கட்டப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

பிரதானசாலைகளிலிருந்து மாவீரர் துயிலுமில்ல வளாகம் வரையிலுமான பகுதிகளில் ஆங்காங்கே ஒலி பெருக்கிகள் மூலம் மாவீரர் சிந்தனைகள் மற்றும் எழுச்சிப் பாடல்கள் என்பன ஒலிபரப்பப்பட்டு வருவதுடன் மாவீரர் தினத்தைமுன்னிட்டு கிராம ரீதியாக சிரமதானப்பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்ல நுழைவாயிலின் முன் பகுதியில் கட்டப்பட்டு வரும் பாரிய அலங்கார வளைவினையும் கிளிநொச்சி மாவீரர் வளாகத்திற்கருகாமையில் மருத்துவப் பிரிவினரால் அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலினையும் படத்தில் காணலாம். (படம்-சோதி)

# தமிழீழ மாவீரர் நாள் –2005



## போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கியமானதாகும். மாவீரர் நாள் என்பது தமிழீழத்தின் விடிவிற்காகவும் உயர்விற்காகவும் உழைத்து உயிரை தற்கொடையாக ஈந்து இந்த மண்ணுக்கே உரமாகி விட்டவர்களினதும் எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும்,எமது சக போராளிகளுமான இம் மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சியதாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும். புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும்.காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.இம் மாவீரர்களின் நினைவுகள் என்றும் எம்மை வழிநடாத்தும், உந்து சக்தியாக இருக்கும் மாவீரர்களது இத்தகைய நினைவு கூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது, எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும் பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும், உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த ஒருங்கிணைந்தபங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

தமிழீழ மாவீரர் பணிமனை.

# நெடுந்தீவு சம்பவத்தைக் கண்டித்து தமிழ்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழர் தாயகத்தின் தேசிய எழுச்சி நாளை கொண்டாடும் நிகழ்வு நாள் தமிழர் தாயகமும், தமிழர் வாழும் உலக நாடுகள் எங்கும் இடம் பெற்று வரும் இவ்வேளையில் சிறிலங்கா புதிய சனாதிபதி பதவியேற்ற மறுநாளே சிறிலங்காப் படைகள் தமது இராணுவ அராஜகத்தை நெடுந்தீவு பிரதேசத்தில் கட்டவிழ்த்து விட்டமையானது மீண்டும் தமிழர் தம் உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்க வழிசெய்யும் நிகழ்வாகவே உள்ளது என தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

எந்த ஒரு காரணமும் இன்றி நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஒரு படை நடவடிக்கை போல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டும் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வராத வண்ணம் அச்சமூட்டப்பட்ட நிலையில் பல பொது மக்கள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டும் உள்ளதுடன் அவர்கள் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர். தமிழ் மக்களின் எழுச்சியை பொறுக்க முடியாமல், தமிழர்கள் தமது தேசிய எழுச்சி நாளான மாவீரர் நாளைக் கொண்டாடுவதைத் தடுக்கும் நோக்குடனேயும், மீண்டும் தமிழின சுத்திகரிப்பின் ஆரம்பமாகவே இந்த நடவடிக்கைகள் நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை ஒட்டுமொத்த தமிழ் மக்களும், புறக்கணித்து தமது நிலையை சிறிலங்காவிற்கும், சர்வதேசத்திற்கும், தெளிவாக எடுத்துக் கூறியுள்ள இந்த நிலையில் இவ்வாறான இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும். முப்படைகளின் தளபதியாக பொறுப்பேற்றிருக்கும் புதிய சனாதிபதி அவர்கள் உரிய நடவடிக்கைகளை உடன் விரைந்து எடுக்க வேண்டும். இல்லையேல் வரப்போகும் காலங்கள் நல்லதொருவரலாற்றுப் பாடத்தை சிறிலங்காவிற்குப் புகட்டும். அது தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் சுதந்திரமான வாழ்வையும், சுதந்திரதேசத்தையும், தமிழருக்குப் பெற்றுத்தரும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெடுந்தீவு சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர், அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இன்று குடாநாட்டு மக்களின் எழுச்சி நிலை குடாநாட்டிலுள்ள படைத்தலைமைக்கும், படைகளுக்கும் ஏன் இலங்கையின் புதிய சனாதிபதிக்கும் நன்கு தெரிந்த விடயமே. எனவே இதுவரை காலங்களிலும் மக்களை இராணுவ ரீதியில் அடக்க முயற்சிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும். இலங்கை இராணுவத்தின் காடைத்தனம் குறித்து பயந்து வாழும் நிலையில் எமது மக்கள் இனி என்றுமே இருக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து நெடுந்தீவில் குவிக்கப்பட்ட இராணுவத்தினரை அகற்றி அம் மக்களின் இயல்பு நிலைக்கு வழி சமைக்க வேண்டும். இல்லையேல் குடாநாட்டிலுள்ள இராணுவத்தினர் முகாம்களுக்குள்ளேயே முடங்கி இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை உரியவா களுக்குத் தெரியப் படுததுகின்றோம் என தெரிவித்துள்ளது (33,41,37,கா)

## யாழ்.குடாநாட்டில் வாகனங்களை சோதனையிடும் பொலிசாரும் இராணுவத்தினரும்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகம் மற்றும் சுன்னாகம் பகுதியிலும், நேற்று முன்தினம் காலை பொலிசார் இராணுவத்தினருடன் இணைந்து வாகனங்களை கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

துப்பாக்கிகளை சுடு நிலையில் வைத்த சுன்னாகம் பொலிசாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

இளைஞர்கள், வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு கடுமையான கேள்விகளுக்கும் உள்ளாக்கப்பட்டதையும், அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

காலையில் இச் சோதனைகள் இடம் பெற்றமையால் தொழில் நிலையங்களுக்குச் சென்ற அரச, தனியார் நிறுவன ஊழியர்களும் பாதிக்கப்பட்டார்கள். (41)

## தேங்காய் வியாபாரிகள் மூவர் நெடுந்தீவில் படையினரால் கைது

(வலிகாமம்)

யாழ்.நெடுந்தீவுக்கு தேங்காய் வியாபாரத்திற்கு சென்ற வட்டுக் கோட்டை மற்றும் இளவாலைப் பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் சிறிலங்கா இராணுவத்தால் கடந்த சனியன்று கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்- அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இளைஞர்களின் பெற்றோரே நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு நேரடியாகக் சென்று முறைப்பாட்டைச் செய்துள்ளனர். (37)

## முன்னரங்க நிலைகளுக்கு ஆயுத தளபாடங்களை நகர்த்தி வரும் சிறிலங்காப் படையினர்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில், கிளாலி, முகமாலை இராணுவ முன்னரங்கங்களுக்கு ஆயுததளபாடங்களை படையினர் பெருந்தொகையில் நகர்த்தி வருவதாக அருகில் உள்ள கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த சில நாட்களாக இப்பகுதிக்கு கனரக வாகனங்கள் பலவற்றில் கனரகஆயுத தளபாடங்கள் பல இப்பகுதியில் உள்ள படை நிலைகளுக்கு, கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் துப்பாக்கி சூட்டுப்பயிற்சி நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (28)

## ஈ.பி.டி.பி அலுவலகங்களுக்கான பாதுகாப்பு யாழ்.குடாவில் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் உள்ள ஈ.பி.டி.பியினரின் அலுவலகங்களுக்கான பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக யாழ். குடாநாட்டில் உள்ள ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மற்றும் அவர்களது முகாம்கள் ,அலுவலகங்களை இலக்கு வைத்து இனம் தெரியாதோரால் தாக்குதல்களும் குண்டு வீச்சுக்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும், நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கடந்த கடந்த சில தினங்களுக்குமுன் யாழ்நகர், சாவகச்சேரி, அச்சுவேலி, மல்லாகம், மந்திகை, நெல்லியடி போன்ற இடங்களில் உள்ள அலுவலகங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் பல ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் காயமடைந்துள்ளதுடன் இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிசாரும், இராணுவத்தினரும், கூட காயமடைந்தும் உயிரிழந்துமுள்ளனர்.

இதன் காரணமாக ஈ.பி.டி.பியினரது வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைகள் மற்றும் பரபரப்பான சூழ் நிலைகள் என்பனவற்றைத் தொடர்ந்தே அவர்களது அலுவலகங்களுக்குப் பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பி அலுவலகங்கள் எந்நேரமும் தாக்கப்படலாம் என்ற காரணத்தால் அவற்றிற்கு அதி உச்ச இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அலுவலகங்களின் உட்புறத்தில் மேலதிக கலகமடக்கும் படையினர் குவிக்கப்பட்டு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (33)

## நெடுந்தீவு செல்லும் பயணிகளுக்கான சோதனைக்கெடுபிடி அதிகரிப்பு

(வலிகாமம்)

யாழ். குறிகாட்டுவான் துறையிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகளுக்கான சோதனைக் கெடுபிடிகள் கடுமையாக்கப்பட்டுள்ளதாகவும், பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினிப்படகு உட்பட சகல படகுகளையும் உரிய நேரத்தில் புறப்படுவதற்கு கடற்படையினர் அனுமதிப்பதில்லை என்றும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குறிகாட்டுவானிலிருந்து காலை பத்து மணிக்கும் மாலை நான்கு மணிக்கும் நெடுந்தீவுக்கான பயணிகள் படகுச்சேவை நடைபெற வேண்டுமென்று வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்படி நேரஒழுங்குகளை நடைமுறைப்படுத்தியிருக்கின்றது.

இருப்பினும் குறிகாட்டுவான் துறை முகத்தில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் மேற்படி நேர ஒழுங்கிற்கமைய படகு புறப்படுவதற்கு ஒரு நாளும் அனுமதிப்பதில்லைஎன தெரிவிக்கின்றனர். (37)

# மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் வடமராட்சியில் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

வடமராட்சிப் பிரதேசத்தில் தமிழீழ மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள் ளன.

ஆரம்ப நிகழ்வுகள் பொலிகண்டி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின. மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட கொட்டகையில் மாவீரர்களின் பொதுப்படமும், முதலாம் மாவீரர் 2ஆம்லெப். சங்கர், 2ஆம் லெப். மாலதி, கப்டன் மில்லர், கப்டன் அங்கயற் கண்ணி ஆகியோரின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு பொதுச் சுடரேற்றி நிகழ்வு ஆரம்பமானது.

மாவீரர் எழுச்சி வார நிகழ்வில் பொதுச்சுடரினை எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்ல நிர்வாகப் பொறுப்பாளர் அ. விநாயகமூர்த்தி ஏற்றிவைக்க, ஈகச்சுடரினை மாவீரன் கப்டன் இதயனின் தந்தையார் க. சின்னத்துரை ஏற்றிவைத்தார். மாவீரர் பொதுப் படத்திற்கான மலர் மாலையை துயிலும் இல்ல அபிவிருத்திக்குழு நிர்வாக உறுப்பினர் செ.நல்லதம்பி அணிவிக்க, முதல் மாவீரர் லெப். சங்கரின் திருவுருவப் படத்திற்கு துயிலுமில்ல அபிவிருத்திக் குழு உறுப்பினர் கு. தர்மலிங்கம் அணிவிக்க, முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப் படத்திற்கு வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் செவ்வந்திநாதன் அணிவித்தார். கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப்படத்திற்கு தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த ஆனந்த குமாரசாமி அணிவிக்க, பெண் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் திருவுருவப்படத்திற்கு துயிலுமில்ல நிர்வாக உறுப்பினர் மு. நடேசன் அணிவித்தார்.

தொடர்ந்து மலர் வணக்கத்தினை பருத்தித்துறை வர்த்தக சங்க செயலர் இரா மயூதரன், தமிழீழ தேசிய மலரான காந்தள் மலர் கொண்டு செலுத்தப்பட்டதையடுத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர் பேரவையினர், பொதுமக்கள் எனப் பலரும் மலர் வணக்கம் செலுத்தினர். அடுத்து அகவணக்கம் செலுத்தப்பட்டு மாவீரர் வார நிகழ்வு உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. (கா)






படம்: காங்கேயன்

# பௌத்த - சிங்களவர்களை மீறி ரணில் எதையும் செய்வாரா?

**சிறிலங்கா** சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால் குறைந்தது இரண்டு இலட்சம் வாக்குகள் அதிகம் பெற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருப்பார் என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து மட்டுமன்றி, மேற்குலக நாடுகளினது மதிப்பீடும் இத்தகையதே ஆகும்.

இத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறின் சமாதான முயற்சிகள் முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமானதாக இருக்கும் எனப் பொதுவானதொரு அபிப்பிராயம் நிலவியதுண்டு. மேற்குலக நாடுகளும், இத்தகைய நம்பிக்கையைக் கொண்டவையாகவே இருந்தன. ஆகையினால் தமிழ் மக்கள் இத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிக்க வேண்டும் என்றே அவை அபிப்பிராயப்பட்டன.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெறினும் சரி, மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறினும் சரி இனப்பிரச்சினை விடயத்தில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இருவருமே தமிழ்மக்களின் பிரச்சினைத் தீர்வில் முன்னேற்றம் காண்பதற்கு இல்லை என்ற நிலையில் தேர்தலில் வாக்களிக்கும் தீர்மானத்தை மக்களே மேற்கொள்ளட்டும் என விட்டு விட்டனர்.

இதன் விளைவானது தமிழ்மக்களின் பல்வேறு வெகுசன அமைப்புக்களும் தேர்தலை புறக்கணிக்குமாறு கோரிக்கை விடுத்ததோடு, தேர்தல் தினத்தை துக்க நாளாகவும் பிரகடனம் செய்திருந்தன. இதன் காரணமாக தமிழ் மக்கள் தேர்தலை முற்றாகவே புறக்கணித்திருந்தனர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1931ஆம் ஆண்டிற்குப் பிறகு தேர்தல் புறக்கணிப்பென்பது முழு அளவிலானதாக இருந்தது.

இதன் விளைவானது தேர்தலின் முடிவையே மாற்றியமைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி வாய்ப்பு பறிக்கப்பட்டதாகவும், மகிந்தராஜபக்ஷ குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வாய்ப்பு ஏற்பட்டதாகவும் பலமானதொரு அபிப்பிராயம் உண்டு.

ஆனால், இத்தகைய அபிப்பிராயம் ஒன்று எழுந்துள்ளதை வைத்து தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தல் வேண்டுமா? பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல இருந்த தடைகள் நீக்கப்படவில்லை. மாறாக அரசியல் யாப்பு, இராணுவத்தினரின் நலன்கள், பாதுகாப்பு என்ற அடிப்படையில் பிரச்சினையைத் தட்டிக் கழிக்கப்பட்டன.

இவை தான் ஒரு புறம் இருக்க சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலின் (2004) போது முன் வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கைகள் தொடர்பாகத்தானும் எதையாவது கூறினாரா? அன்றி மறைமுகப் போர் நிறுத்தப்படும் - தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படும்; வெளியேற்றப்படுவார்கள். யுத்த நிறுத்த உடன்பாடு முழு அளவில் சீராக அமுல் செய்யப்படும் என உறுதி மொழி ஏதாவது வழங்கினாரா?

இது மட்டுமன்றி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவதைத் தீர்மானம் செய்த பின்னர் தமிழ்மக்களையோ, அன்றி அவர்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளைத் தானும் அணுகினாரா? யாழ் குடாநாட்டிற்கான பணயம் எனக்கூறி பலாலிப் படைத் தளத்துடன் அவர் தனது பயணத்தை முடித்துக் கொண்டார். தமிழ் மக்கள் மத்தியில் செல்லவே இல்லை.

இவற்றிற்கு பாதுகாப்பைக் காரணமாகக் கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. ரணில் விக்கிரமசிங்க அதில் அக்கறை காட்டவில்லை என்பதே உண்மை, ஏனெனில் தமிழ் மக்களிடம் சென்று வாக்குக் கேட்டாலோ அன்றி விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டாலோ பௌத்த- சிங்களப் பேரினவாதிகள் தனக்கு எதிரான பிரச்சாரத்தை தீவிரப் படுத்தி விடுவார்கள். நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டதாகவும், புலிகள் -யானைக்கு இடையில் கூட்டுளனக் கூச்சலிடுவார்கள் என்ற அச்சமுமே அவர் ஒதுக்கிக் கொண்டதற்குக் காரணமாகும்.

ஆகையினால் தமிழருடனும், புலிகளுடனும் பேசுவதையும், சந்திப்பதையுமே தனக்கு எதிரான பிரச்சாரமாக மாற்றி விடுவார்கள் என அஞ்சும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை கொள்ள என்னதான் உள்ளது. அவர்களின் நியாயப்பாடான கோரிக்கைகளை ரணில் விக்கிரமசிங்கவால் நிறைவேற்ற முடியுமா?

ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற்றிருப்பினும், சிங்களவர் மத்தியில் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடமாட்டாது. அதாவது பௌத்த- சிங்கள பேரினவாதிகள் அதற்கு இடமளித்திருக்கமாட்டார்கள். மாறாக இனவாதப் பிரச்சாரமும் இனவிரோத நடவடிக்கையும் அதிகரித்ததாகவே இருந்திருக்கும்.

இதற்கு முன்னதாக ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிபெற்றிருப்பினும், பாராளுமன்றத்தில் அவரால் பெரும்பான்மையைப் பெற்றிருக்க முடியாது. தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்ற பின்னர் அமைச்சரவையில் பங்கேற்பதில் பிரிந்தும், வெளியிலுமாக நிற்கும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற பேரினவாதக் கட்சிகள் ரணில் வெற்றி பெற்றிருந்தால் வெகு வேகமாக ஒருமைப்பாட்டிற்குள் வந்திருப்பர். அப்பொழுது அரசாங்கம் இன்னமும் பலம் பெற்றதாக மாறியிருக்கும். அரசாங்கத்தைக் கலைப்பதென் பதே ரணிலுக்குச் சங்கடமாக இருந் திருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கலைத்து தேர்தலுக்குப் போனால் மீண்டும் தேர்தலை முன் நிறுத்தி தமிழ் மக்களின் நெருக்கடிகள், பிரச்சினைகள் பின் தள்ளப்பட்டவையாக, ஓரந்தள்ளப்படுபவையாகவே இருந்திருக்கும். தேர்தலில் கூட இனவாத சக்திகளை மீறி ரணிலால் வெற்றி பெற முடியுமா என்பது கேள்விக்குரியதே.



ஆகையினால் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பினும், அவரால் இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னேற்றம் காணும் வாய்ப்பு தோன்றும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. சனாதிபதிப் பதவி ரணிலிடமும், அரசாங்கம் ஐ.ம.சு முன்னணியிடமும் இருந் திருக்கும். அவ்வாறு பாராளுமன்றத் தேர்தல் நடத்தி வெற்றி பெற்றாலும் கூட எதனையும், செய்ய முடியாத பலவீன மானதொரு நிலையிலேயே அவரால் இருக்க முடியும்.

இந்நிலையில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் எதனையும் ரணில் விக்கிரமசிங்க வினால் எட்டுதல் என்பது சாத்தியப்பாடானதாக இருக்க மாட்டாது. இதேவேளை மேற்குலகின் ஆதரவு அவருக்குக்கிட்டுமாகையினால் ஆட்சியை நடத்துவதற்கு அவர்களின் உதவியையே நம்பியிருப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையில் சிறுபான்மை இனங்கள் மீதே அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும். அதாவது சமாதானத்தின் பெயரில் தொடர்ச்சியாக விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ளுமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதற்கான சூழ்நிலை தவிர்க்கப்பட முடியாததாகிவிடும்.

இத்தகையதொரு நிலை ஏற்படுவதற்கு பதிலாக சுமார் அரை நூற்றாண்டு காலத்தையும் கடந்து நிலவும் இனப்பிரச்சினைக்குச் சிங்களப் பேரினவாத சக்திகள் எத்தகைய முடிவுகளை முன்வைக்கப் போகின்றன என்பதை தமிழர் புறக்கணித்த தற்போதைய தேர்தல் முடிவுகளின் படி சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ள முடியும். இதனை மகிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தப்போகிறார்.

சர்வதேச சமூகத்தின் பார்வையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டி முறையிலாக அமைவது வரவேற்கத்தக்கதொன்றாகியுள்ளது. தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவும் அவை தயாராகவே உள்ளன.

அத்தோடு இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் நேர்வே அரசு ஏற்பாட்டாளராகச் செயற்படுவதற்கும் அவை தமது ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கியுள்ளன. ஆனால் இவை குறித்து பௌத்த - சிங்கள பேரினவாதம் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்படுதல் அவசியமாகின்றது. இதுவே சிறிலங்கா ஆட்சியாளர்களின் இனப்பிரச்சினை தீர்வு குறித்த வெளிப்பாடாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது பௌத்த -சிங்களவரின் தீர்மானத்தை மீறியதாக சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே மேற்கொள்ளப்போவதில்லை. இதனையே சிறுபான்மையீனரின் வாக்குகளைப் பெற்று சனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வந்திருப்பினும் என்ற கேள்விக்குப் பதில் தேட வேண்டியுமுள்ளது. ரணில்விக்கிரமசிங்க யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செய்து கொண்டதினாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த முன் வந்ததினாலும், தமிழ்மக்கள் அவருக்கு வாக்களிப்பர் என்பதே பொதுவானதொரு அபிப்பிராயமாக இருந்தது. இது ஓரளவு சரியானதொரு மதிப்பீடாகவே கொள்ளத்தக்கதாயினும் முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளத் தக்கதொன்றா? என்ற கேள்வியும் உள்ளது.

ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செய்து கொண்டவராயினும், அதனை அவர் முழு அளவில் அமுல் செய்யவில்லை. மாறாக விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளிலேயே அவரின் செயற்பாடுகள் முனைப்புப் பெற்றிருந்தன.

ஆயுதப்படைகளை பலப்படுத்துதல், விடுதலைப்புலிகளுக்கு எதிரான சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலை உருவாக்குதல், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் முரண்பாடுகளைத் தோற்றுவித்தல் போன்ற செயற்பாடுகளில் அவரின் அரசாங்கம் முனைப்புடனேயே ஈடுபட்டிருந்தது.

இதேசமயம் யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் சரி, இவற்றையும் மீறி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிப்பதாக வைத்துக் கொள்வோம். நடந்து விடப்போவதுதான் என்ன? சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட்டு விடுமா? அன்றி மறைமுகப் போரைத் தான் அவரால் நிறுத்தி விடத்தான் முடியுமா? தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் உட்பட அடிப்படைப் பிரச்சினைகளுக்குத்தான் தீர்வு ஏற்பட்டு விடுமா?

தமிழ்மக்கள் ஆதரித்து ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற்றிருப்பின் சிறுபான்மையினரின் ஆதரவில் வெற்றி பெற்றவர் என்ற பெயர் கிடைத்திருக்கும். தெற்கில் நடந்த வாக்களிப்பு முறைமை இதனைத் தெளிவாகவே வெளிக்காட்டியுள்ளது. அதாவது சிறுபான்மையினரின் ஆதரவு பெற்ற தேர்தல் மாவட்டங்களில் மட்டுமே ரணில் விக்கிரம சிங்கவால் வெற்றிபெற முடிந்துள்ளது.

இந்நிலையில் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரம சிங்க சனாதிபதியாக வந்திருப்பின் அவரால் சாதிக்கக் கூடியது என்னவாக இருந்திருக்க முடியும்? அதாவது யுத்த நிறுத்தம் சமாதான முயற்சிகளை எந்தளவில் முன்னேற்றம் கண்டிருக்க முடியும்? இதனை வேறுவிதமாகக் கூறுவதானால், சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடம் ஏறினாலும் மேற்கொண்டிருப்பார். ஆகையினால் மகிந்த ராஜபக்ஷ வந்தால் என்ன? ரணில் வந்தால் என்ன? ஒன்றே நிகழ்ந்திருக்கும். ஆகையினால் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்மக்கள் ஆதரித்து எதுவும் நடந்துவிடப்போவதில்லை.

ஆகையினால், இனப்பிரச்சினை விடயத்தில் பௌத்த - சிங்களவரை பிரதிநிதித்துவம் செய்யும் மகிந்த ராஜபக்ஷவே சமாதானமா? யுத்தமா? என்ற தீர்மானத்தை எடுக்கட்டும். இனப்பிரச்சினைக்கு எத்தகைய தீர்வு என்பதைக் கூறட்டும். நோர்வேயை ஏற்பாட்டாளர்களாக கொள்வதா? இல்லையா? என்பதை வெளிப்படுத்தட்டும். இதுவே இனப்பிரச்சினையில் பௌத்த - சிங்கள ஆட்சியாளரின் முடிவாகக் கொள்ளத்தக்கது. இதனை அடிப்படையாகக் கொண்டே இனப்பிரச்சினையில் ஈடுபாடு காட்டும் சர்வதேச அரசுகளும் ஒரு முடிவிற்கு வருதல் முடியும். சாத்தியப்பாடற்றதொன்றிற்காகத் தமிழ்மக்கள் மீது அழுத்தம் கொடுப்பதை விடுத்து சாத்தியப்பாடான ஒன்றினை சர்வதேசமும் சிந்திப்பதற்கு வாய்ப்பைக் கொடுக்கும். □

**ஜெயராஜ்**




## 14.11.2005
## 20.11.2005

**14**

☐ யாழ்ப்பாணத்திலுள்ள ஹலோரெஸ்ட் நிறுவனத்தின் கண்ணிவெடியகற்றும் பிரிவைச்சேர்ந்த ஊழியர்கள் சிலர் எந்தவிதமான முன்னறிவிப்புக்களோ விசாரணைகளோ இன்றி வேலையிலிருந்து நிறுத்தப்பட்டதைக் கண்டித்து ஊழியர்கள் புறக்கணிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

☐ அம்பாறை நகரை அண்டிய பகுதியில் வெடிபொருட்கள் சிலவற்றைக் கடத்திச் சென்றதாகக் கூறி பாரவூர்தியொன்று பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

☐அம்பாறையின் அக்கரைப்பற்றுப்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் இருவர் சுட்டுக் கொலை.

☐ மட்டக்களப்பில் ஐந்து தமிழ் இளைஞர்கள் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரால் கைது.

**15**

☐ தமிழீழத்தின் தேசிய மரம்,பறவை, விலங்கு என்பன அறிவிப்பு; தேசியமரமாக வாகையும், தேசியப் பறவையாக செண்பகமும், தேசிய விலங்காக சிறுத்தையும் அறிவிக்கப்பட்டன. தேசியப்பூவான கார்த்திகைப்பூ ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.



☐ திருகோணமலை பாலையூற்றுப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 40 வயதுடைய நபர் ஒருவர் பலி.

☐ வவுனியா போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட தலைவருக்கும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருக்குமிடையிலான சந்திப்பொன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான புளியங்குளம் பகுதியில் இடம்பெற்றது.

☐ யாழ்.ஊர்காவல்துறையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டுக்காயம்.

☐விடுதலைப்புலிகளின் போர்ப்பயிற்சிக்கல்லூரியில் தாக்குதல் அணிப்போராளிகளுக்கான சிறப்பு பி.கே. ஆயுதப்பயிற்சி நெறி நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெற்றது.



☐இராணுவத்தை விட்டு தப்பியோடிய பின்னர் கைது செய்யப்பட்டு குருநாகல் போயகளே இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவச்சிப்பாய்கள் 13 பேர் மீண்டும் தப்பியோடினர்.

**16**

☐ யாழில் பல்வேறுபட்ட குற்றச்செயல்கள் மற்றும் சமூகவிரோதச் செயல்களில் தொடர்புடைய ஒருவர் மக்களினால் அடித்துக்கொலை.

☐ திருகோணமலை பாலையூற்றில் அடையாளம் தெரியாத நபர்களினால் நபர் ஒருவர் சுட்டுக்கொலை.

☐யாழ்.குடாநாட்டில் இராணுவக்காவலரண்கள், ஈ.பி.டி.பி குழுவினரின் அலுவலகங்கள், வாக்குச்சாவடிகளுக்கு காவலுக்கு நிற்கும் படையினர் மீது கைக்குண்டு வீச்சுக்களும், துப்பாக்கிச்சூடுகளும் மேற்கொள்ளப்பட்டதில் பல படையினரும், ஈ.பி.டி.பி குழு உறுப்பினர்களும் காயம்.

☐மட்டக்களப்பில் இடம்பெற்ற இரு வேறு தாக்குதல்களில் இரு சிறிலங்காப் பொலிசார் உட்பட ஐந்து படையினர் காயம்.

☐ பொலன்நறுவை மாவட்டம் அரலங்கவிலவில் சிறிலங்கா ஊர்காவல்படையினர் மீது அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி.

☐சனாதிபதித் தேர்தலை எதிர்த்து பிரதான வேட்பாளர்களின் கொடும்பாவிகள் யாழ்.திருநெல்வேலிச் சந்தியில் எரிக்கப்பட்டது.

**17**

☐ சிறிலங்காவின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற்றது.

☐ திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் வர்த்தகர் ஒருவர் உந்துருளியில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

☐ அம்பாறை மாவட்டம் ஆலையடி வேம்பு விவேகானந்தா வித்தியாலயம் வாக்குச்சாடியில் பாதுகாப்புக் கடமையிலிருந்த சிறிலங்காப் பொலிசார் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டதில் 11 பேர் காயம்.

**18**

☐ அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் பெரிய ஜும்மா பள்ளி வாசலில் அதிகாலை தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் நடாத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் நான்கு முஸ்லிம்கள் பலி; 20 இற்கும் மேற்பட்டோர் காயம்.

☐ சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக மகிந்தராஜபக்ஷ தெரிவு.

☐ மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் முஸ்லிம்கள் இருவரது சடலங்கள் சிறிலங்காப் பொலிசாரால் மீட்பு.

☐ மந்திகை சிலையடியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி.கட்சியின் அலுவலகத்தில் கடமையிலிருந்த பொலிசார் மற்றும் படையினர் மீது இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பொலிசார். ஒருவர் படுகாயம்.

**19**

☐ சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ சிறிலங்காவின் தலைமை நீதிபதி சரத் என். சில்வா முன்னிலையில் பதவியேற்றார். இந்தப் பதவியேற்பு வைபவம்சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.



☐ சிறிலங்காவின் சனாதிபதியாக மகிந்தராஜபக்ஷ பொறுப்பேற்றதையடுத்து அமைச்சரவை கலைக்கப்பட்டது.

☐ யாழ். குடாநாட்டினது வீழ்ச்சிதான் தமிழீழத்தின் இறுதிப் போராக இருக்கும் என்று தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார். லெப். கேணல். கங்கை



அமரன் கடற்படைத் துணைப்படை பயிற்சிப் பாசறையின் ஐநதாவது அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**20**

☐ புலிகளின் குரல் வானோசை- 15 விழா புலிகளின் குரல் அமலன் அரங்கில் சிறப்புற நடைபெற்றது.

☐ மட்டக்களப்பு மீரோவோடையில் முஸ்லிம் தம்பதிகள் இருவர் அவர்களது வீட்டில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி தாரிகளால் சுட்டுக்கொலை.

# இந்.சனாதிபதி, ஐரோ.ஒன்றியம் மகிந்தவுக்கு வாழ்த்து!

சிறிலங்காவின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய சனாதிபதி அப்துல் கலாம் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

" சிறிலங்காவின் புதிய சனாதிபதியாகப் பதவியேற்றுள்ள தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த காலங்களைப் போல் தங்களது ஆட்சிக்காலத்திலும் இரு நாடுகளிடையேயான இரு தரப்பு உறவுகள் வலுப்படுத்தப்படும் என்று உறுதியாக நம்புகிறோம். இந்தச் சூழலில் சிறிலங்காவில் அமைதியும் இணக்கமும் தங்களது தலைமையின் கீழ் உருவாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று இந்திய சனாதிபதி அப்துல்கலாம் மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐரோப்பிய ஒன்றியமும் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளது.

அதில் சிறிலங்கா முகம் கொடுக்கவுள்ள சவால்களுக்கு நாம் முழு ஆதரவளிப்போம் என்றும் வடக்கு கிழக்கில் தமிழர்கள் வாக்களிப்பது தடுக்கப்பட்டுள்ளது குறித்து அதிருப்தி அடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சனாதிபதி மகிந்தவிற்கு சவால்விடும் ஹட்சன்

சிறிலங்கா அரசாங்கத்தின் வானொலியான ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பிலிருந்து தான் பதவி விலகினால் இந்த நிறுவனத்தையே நீங்கள் இழுத்து மூட வேண்டி இருக்கும் என்று அதன் தலைவர் ஹட்சன் சமரசிங்க எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஹட்சன் சமரசிங்க மேலும் கூறியுள்ளதாவது;

என்னைப் போன்ற நிர்வாகி ஒருவரை உங்களால் கண்டுபிடிக்க முடியாது என்று புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு அங்குலமும் எனக்கு தெரியும் பல்வேறு தனியார் வானொலிகள் கூடுதலான ஊதியத்துக்கு என்னை அழைத்துக் கொண்டிருக்கின்றன.

நான்கு சனாதிபதிகளின் கீழ் பணியாற்றிவிட்டேன் எவருடைய தாளத்துக்கும் நான் ஆடுகிறவன் அல்ல என்று ஹட்சன் சமரசிங்க கூறியுள்ளார்.

# உடத்தலவின்ன படுகொலை வழக்குத் தீர்ப்பு சனவரியில்

(கொழும்பு)

உடத்தலவின்னவில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கின் தீர்ப்பு வரும் சனவரி மாதம் இருபதாம் திகதி வழங்கப்படவுள்ளது.

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு உடத்தலவின்ன பிரதேசத்தில் பத்து இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதன் போது இந்த வழக்கின் தீர்ப்பு வரும் சனவரி மாதம் இருபதாம் திகதி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக முன்னாள் சிறிலங்காப் பிரதிபாதுகாப்பு அமைச்சர் அநுருத்தரத்வத்தை மற்றும் அவரது மகன்மார்இருவர் உட்பட பதின்நான்குபேர் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியேறும் சந்திரிகா

சிறிலங்கா சனாதிபதியாகவிருந்து ஓய்வு பெறும் சந்திரிகா குமாரதுங்க, நாளை முதல் கொல்லப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியேற உள்ளார்.

கொழும்பின் வாஜிராமா மாவத்தையில் உள்ள இந்த இல்லத்தில் குடியேறுவதற்கான முன்னேற்பாடுகளைச் சந்திரிகா செய்துள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் இந்த இல்லத்தை அவர் தெரிவு செய்ததாகக் கூறப்படுகிறது. இதேவேளை நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேச்சுக்களை நடத்திய மகிந்த ராஜபக்ஷ சந்திரிகா விரும்பிய காலம் வரை சனாதிபதி மாளிகையில் தங்கி இருக்கலாம் எனவும் அதுவரை தாம் அலரிமாளிகையில் தங்கி இருக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

# போலி நாணயத்தாள் அச்சிட மையம் கண்டுபிடிப்பு


*–நான்குபேர் கைது*

சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றின் போது போலி நாணயத்தாள்கள் அச்சிடும் மையம் ஒன்றை தங்கொட்டுவ பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். தங்கொட்டுவ கோனாவில பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இந்த மையம் இயங்கி வந்ததாக அவர்கள் தெரிவித்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பின் போது 257 போலி 500 ரூபா நாணயத்தாள்களும் அந்த நாணயத்தாள்களை அச்சிடப்பயன்படுத்தப்பட்ட கணனி இயந்திரமும் கைப்பற்றப்பட்டதோடு நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சர்வதேச முதலீட்டாளரைக்கவர இல.முதலீட்டுச்சபை நடவடிக்கை

இலங்கை முதலீட்டுச்சபை தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கான பங்காளர்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் நோக்கில் தனது இணையத்தளத்தில் புதிய சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த இணையத்தள சேவையுடன் தொடர்பு கொள்வதன் மூலம் முதலீட்டாளர்கள் தமக்குத் தேவையான பங்காளர்களை அறிந்துக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த முகவரியில் வர்த்தக பங்காளர்களைத் தேடும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## முருகன் இரத்தினசிங்கம்

மலர்வு:-13-04-1941 உதிர்வு:-03.12.2004

### திதி:-23.11.2005

மாசற்ற அன்பின் திருவடிவே, பண்பின் சிகரமே
பாசத்தின் குலவிளக்கே– எங்கள் நலம் காத்த திருவுருவே
எம்மை உயர் வழியில் உருவாக்கிய
எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் மறைந்து ஓராண்டு ஓடிவிட்டது
ஆறவில்லை எம்துயரம் – இன்னும் காயவில்லை எம்கண்ணீர்
ஓராண்டென்ன ஆயிரம் ஆண்டுகள்தான் போனாலும்
உங்கள் பாசத்தை மறவோம் ஐயா
கண்ணீரோடு உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:-
கேதீஸ்வரன்
கேதீஸ் பந்தல்சேவை,
கணேசபுரம்
கிளிநொச்சி.

உங்கள் பிரிவால் தவிக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(6940)

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்

தாய்மடியில் 26 - 02 - 1978



தாய்மண்ணில் 23 - 11 - 1995

## லெப். கருங்குழலி

(பொபினீசியா அல்போன்ஸ் லிகோறி)

ஈழத்தாயின் மண் மீட்க உன்
தாய் உன்னை ஈன்றெடுத்தாள்
வீர மறக்குலப்பெண்ணென – நீ
வீறு கொண்டாய், வீழ்ந்து பட்டாய் – இது
வீழ்ச்சியல்ல, உன் தாய் மண்ணின் மீட்சி – என
வெந்தளிர் நினைவோடு ஆண்டுகள் பத்திலும்
உறைந்து நிற்கிறது உன் நினைவு

மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

என்றும் உன் நினைவுடன்
ஐயா, அம்மா, அண்ணன்மார்,
அக்கா, தம்பி, தங்கை, மருமக்கள்

(6944)

# தமிழர் விடியலின் அகவை ஐம்பத்தொன்று

## தமிழர் விடிவின் சூரியனே, வாழ்க நூற்றாண்டு காலம்




ஆயிரம் நூற்றாண்டு வீழ்ந்து
கிடந்த தமிழனின்
குலக்கொடி, 21ஆம் நூற்றாண்டில்,
உந்தன் காலத்தில்
உயர ஓங்கிப் பறக்கிறது,
அவனியில், தரணியில்
உலகினில், தமிழர் தன்மானம் காத்த
சூரியதேவனே,
எம்மை ஆண்டோர்
சகாப்தத்தை முடித்து,
தமிழர் ஆளும் சகாப்தத்தை
உருவாக்கினாய்
உன்னுடைய காலம்
தமிழ் இனத்தின் பொற்காலம்
எங்கள் கார்த்திகைப் பூவே,
தமிழ் இனத்தின் உயிரே

பல்கலைக்கழக மாணவர்கள்

(சீ.13362)

# BOC
## இலங்கை வங்கி
## பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.11. 2004ஆம் திகதிவரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட் ;கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரிவீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக்கிளையில் மார்கழி மாதம் 10ஆம்,11ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத் தருகின்றோம்.

- யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை
- யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்
- திருநெல்வேலி

இந் நகைகள் மீட்கப்படவேண்டிய கடைசித்திகதி- 09.12.2005.

அறிவித்தலின்றி ஏலவிற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிபொது முகாமையாளர்,
(சி.13363) (வடபிராந்தியம்-யாழ்ப்பாணம்)



# கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி
## தரம்-06 அனுமதி

2006ஆம் ஆண்டில் தரம் 6 ஆங்கிலமொழி மூலமான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதால் இவ்வகுப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் பெற்று 2005 மார்கழி 24ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

அதிபர்,
(6943) கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி.



# 06 ஆம் ஆண்டு நீங்காத நினைவு



தாயின் மடியில் முத்தாய்
06 ✳ 01 ✳ 1972

தாயக மண்ணில் வித்தாய்
23 ✳ 11 ✳ 1999

## மேஜர் செங்கோட்டையன்
(வேலாயுதம்-கதிர்காமநாதன் (நாதன்))
மன்னார் மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர்

மகனே நாதா நீ மறைந்து
ஆறாண்டுகள் சென்றுவிட்டதையா
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சென்றுவிட்டாய் ஐயா, ஆறாயிரம்
ஆண்டுகள் சென்றாலும் எம்மை விட்டு
உன் நினைவு நீங்காதையா.

சதாபுரம்,
இத்தாவில், பளை

உன்பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

(6941)



# தமிழீழப் போக்குவரவுக்கழகப் பயணியர் பேருந்துப்பணி
## இராமநாதபுரம்-கிளிநொச்சி

இப் பேருந்துப்பணி பொதுமக்கள் வேண்டுகைக் கிணங்க 26.11.2005 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**இராமநாதபுரம்-கிளிநொச்சி**

| இராமநாதபுரம் → | வட்டக்கச்சி → | கிளிநொச்சி |
|---|---|---|
| காலை:- 07.30 | 07.45 | 08.15 |

**கிளிநொச்சி-இராமநாதபுரம்**

| கிளிநொச்சி → | வட்டக்கச்சி → | இராமநாதபுரம் |
|---|---|---|
| மாலை:- 05.00 | 05.30 | 05.45 |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

(சி.13375)



# SRILANKA RED CROSSSOCIETY

SRI LANKA RED CROSS SOCIETY

## Vacancy of Branch Executive officer for kilinochchi branch.

Branch Execulive Officer will be required to the SLRCS kilinochchi District Branch. The person appointed will be liable for transfer to any part of the country. The BEO will assist the Ditector General in implementing policies and programs adopted by the society.

Human Resources Management. General Office Administration, project planning and Implementation. Monitoring and Evaluation of projects implementation will be part of his/her responsibilities.

He/She will also be responsible for assets, maintenance, accounting and reporting on project implementation.

The following minimum qualifications are applicable for the position.

a .A Degree Diploma from a recognized university or similar institute in the field of Management Studies. Sociology/Social Science or Community Development or related fields with at least 2 Years experience in the field related to the qualifications.

Or

b.G.C.L A/L with at least 3 subijects and seven years experience in community Development and and/or Social work.

Or

C. G.C.I O/L with 12 years working experience in Community Development and/or Social work.

Age: Below 55 years.

Please submit your applications within 14 days of this advertisement to the.

**Hon.Chairman,**
**Sri Lanka Red Cross Society,**
**kilinochchi District Branch,**
**Kannan Temple Road,**
**kilinochchi.**

(சி.13365)

# பெடரரின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தார் நல்பாண்டியன்



சீனாவின் சங்காய் நகரில் நடைபெற்ற மாஸ்டர் கிண்ண டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் உலகின் முதல் தர வீரர் ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளார். இவரை ஆர்ஜன்டீனாவின் டேவிட் நல்பாண்டியன் தோற்கடித்துள்ளார்.

இதன் மூலம் இவ் வருடத்தில் தொடர்ச்சியாக 35 போட்டிகளில் வெற்றியீட்டி வந்த சுவிட்சர்லாந்து வீரர் தோல்வியைச்சந்தித்துள்ளார்.

மேலும் தனது மூன்றாவது மாஸ்டர் கிண்ணத்தை வெல்லும் அவரது கனவும் நனவாகவில்லை. இவ் வருடத்தில் பெடரர் பெறும் நான்காவது தோல்வி இது என்பது குறிப்பிடத்தக்கது.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் பெடரருக்கு சளைக்காது போட்டியிட்ட நல்பாண்டியன் முதல் இரு செட்களை 7-6,7-6 என்ற நிலையில் பெடரரிடம் இழந்த போதும், மூன்று, நான்கு, ஐந்தாவது செட்களை 6-2,6-1,7-6 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார் நல்பாண்டியன்.

நல்பாண்டியனுக்குக் கிடைத்த பரிசுத்தொகை 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பல முன்னணி வீரர்கள் காயம் காரணமாக வெளியேறிய நிலையில் பெடரரே கிண்ணம் வெல்வார் என எதிர்பார்த்திருக்க, அவர் நல்பாண்டியனிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளார்.

# இந்திய அணியின் புதுப்புது அணுகுமுறை அளவுக்கு மீறினால் நஞ்சாக மாறலாம்



## எச்சரிக்கிறார் கபில்தேவ்

பரீட்சார்த்த ரீதியாக இந்திய அணியில் மேற்கொள்ளப்படும் புதுப்புது அணுகுமுறைகள் அளவுக்கு அதிகமாகும் போது, அது நஞ்சாக மாறிவிட வாய்ப்புண்டு என இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கூறியுள்ளார்.

சமீபத்தில் முடிவுற்ற இலங்கைக்கு எதிரான தொடரில் தலைவராக ராகுல் ராவிட் நியமிக்கப்பட்டார். அணியிலும் இளம்இரத்தம் அதிகமானது. அத்துடன் புதிய பயிற்சியாளர் கிரேக் சப்பலும் தனது அனுபவத்தை மூலதனமாகக் கொண்டு புதுப்புது உத்திகளை செயற்படுத்தினார். யார் எந்த நிலையில் துடுப்பாட்டம் செய்வார். எந்த நிலையில் பந்து வீசுவார் போன்றவை நிரந்தரமாக இல்லாமல் இருந்தது. அந்த அணுகு முறையால் இலங்கைக்கு எதிரான தொடரை 6-1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது.

தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஒரு நாள் தொடரில் இந்திய அணி பங்கேற்றுவருகிறது. ஹைதராபாத்தில் புதன்கிழமை நடைபெற்ற முதல் ஆட்டத்தில் ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவிடம் இந்திய அணி தோற்றுப் போனது. இந்நிலையில் டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட கபில்தேவ் நிருபர்களிடம் கூறியதாவது;

அணியின் முன்னேற்றத்துக்குப் புதுப்புது உத்தி, தந்திரம் ஆகியன நல்லது. ஆனால் அது சிறிய அளவில் இருக்க வேண்டும். அதிகமாக திணிக்கும் போது அம் மாதிரியான செயல்கள் அணிக்கே பாதகமாகி விடும். அத்துடன் அம் மாதிரியான அணுகுமுறைகள் எப்போது பிரச்சினையை ஏற்படுததும் எப்போது அணிக்கு எதிராக அமையும் என்பதைக் கூட நம்மால் கண்டறிய முடியாது.

தொடர்ந்து வெற்றிபெறும் வகையில் திட்டமிடுவது மிகவும் சிரமம். அதைக் கண்டுபிடித்து விட்டால் அணி வீரர்களுக்கும் வலுவான நம்பிக்கை கிடைத்துவிடும். இலங்கைக்கு எதிரான தொடரை இந்தியா வென்றதில் மகிழ்ச்சி. அதைக் காட்டிலும் முக்கியமான விடயம் அந்த வெற்றியைப் பாதுகாக்க வேண்டியதுதான். மாறுபட்ட எதிர்பார்ப்புக்காக ராவிட்டிடம் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கூடுதல் பொறுப்பைச் சாதகமான நோக்கிலேயே அவர் பார்க்க வேண்டும். இலங்கைக்கு எதிரான தொடரில் தனது தனிப்பட்ட திறமையுடன் அணி வீரர்களும் திறமையை வெளிக்காட்டும் படியான அணுகுமுறையை அவர் மேற்கொண்டுள்ளார்.




அதே சமயம் அவரது தலைமைப் பண்பு குறித்து திட்டவட்டமான கருத்தைக் குறுகிய காலத்தில் கூற முடியாது எனவும் கபில் தேவ் குறிப்பிட்டார்.

## பிரிமியர் லீக் கால்பந்து போட்டி

# விகன் அணியின் தொடர் வெற்றிக்கு ஆர்ஷனல் அணி முற்றுப்புள்ளி வைத்தது






பிரிமியர் லீக் உதைப்பந்தாட்டத்தில் தொடர்ந்து ஆறு போட்டிகளில் வென்ற விகன் அணி அண்மையில் நடை பெற்ற போட்டியில் ஆர்சனல் அணியி டம் மூன்றுக்கு இரண்டு என்ற கோல் கணக்கில் தோல்வியைச் சந்தித்துள்ளது. ஆட்டத்தில் முதல் பாதியில் ஆர்ஸினல் அணியின் றொபின் வான் பெர்சியும், ரீயறிஹன்றியும் தலா ஒருகோல் அடித்தனர். பின்னர் விகன் அணி வீரர் ஜேன்ஸ் லீயன், ஹென்றி கமராஸ் இருவரும் ஒவ்வொரு கோலை அடித்தனர் எனினும்ஆர்சனல் அணியின் மேலும் ஒரு வீரரான பெ்ரகாஸ் ஒரு கோலை அடித்து வெற்றியை உறுதிப்படுத்தினார்.

# அப்ரிடிக்கு ஐ.சி.சி. போட்டித் தடை



ஆடுதளத்தை சேதப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தானின் சகலதுறை வீரர் அப்ரிடிக்கு ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் இரண்டு ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பைசலாபாத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட்போட்டியின் இரண்டாம் நாளான நேற்று முன் தினம் மேற்படி குற்றச்சாட்டை விசாரித்த சர்வதேச கிரிக்கெட்சபை அப்ரிடி குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ள மேற்படி தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. இதே வேளை போட்டி விதிமுறைக்கு மாறாக கையுறையை அணிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வேகப்பந்து வீச்சாளர் அக்தருக்கு போட்டிச் சம்பளத்தில் இருந்து 20 சதவீதத்தை செலுத்த ஐ.சி.சி பணித்துள்ளது.

# 19 வயது உலகக்கிண்ண கிரிக்கெட் நேபாள அணி தகுதிபெற்றது

19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக்கோப்பைத் தொடருக்கு நேபாள அணி தகுதி பெற்றுள்ளது.

இறுதிப் போட்டியில் நேபாள அணி மலேசியாவைச்சந்தித்தது. இதில்ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வென்ற நேபாள அணி அடுத்த ஆண்டு இலங்கையில் நடக்கவுள்ள உலகக்கோப்பைக்கு தகுதிபெற்றது. 16 அணிகள் மோதவுள்ள உலகக்கோப்பைத் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்ற கடைசி அணி நேபாளம் என்பதுகுறிப்பிடத்தக்கது.

# துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் வேதனை அளிப்பதாகவுள்ளது மகேல

அணியின் உபதலைவர் பதவியிலிருந்து தன்னை நீக்கியமை பெரும் கவலையளிப்பதாக சிறிலங்கா கிரிக்கெட் அணியின் வீரர்மகேல ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இந்தியாவுடனான டெஸ்ட் போட்டித் தொடர் அணியில் சமிந்தவாஸ் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மேலும் கூறும் போது; இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்த எடுத்த முடிவு தொடர்பாக காரணத்தையறிந்துகொள்ள தனக்கு அவகாசம் வழங்குமாறு அவர் சிறிலங்கா கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்ததாகவும், சந்திப்பின் போது காரசாரமான விவாதம் நடைபெற்றதாகவும் அதிகாரி ஒருவர் அவரைப் பேசிய னுப்பியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.மகேலவுக்கு சந்திப்பொன்றை ஏற்படுத்தித்தர கோரிக்கை விடுக்க எவ்வித உரிமையும் கிடையாது என அதிகாரியொருவர் அப போது தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் அணிக்காக பாடுபட்ட வீரர் தொடர்பில் இவ்வாறு அதிகாரிகள் நடந்துகொண்டுள்ளமை மிகவும் வேதனையளிப்பதாக அணித்தலைவர் மார்வன்அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

# ரசிகர்களை ஏமாற்றியது மழை சென்னை போட்டி கைவிடப்பட்டது

ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான சென்னை ஒரு நாள் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக கைவிடப்பட்டது. வங்கக் கடலில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக அடிக்கடி பெய்துவரும் கனமழையால் போட்டி கைவிடப்பட்டதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றிபெற்ற நிலையில் சென்னை போட்டி பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இப்போட்டி நடைபெறாததால் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.



# பீற்றர்சன், இயன்பெல் சதம் இங்கிலாந்தும் ஓட்டம் குவிக்கிறது





பைசலாபாத்தில் நடைபெற்று வரும் பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இயன் பெல், பீற்றர்சன் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் இங்கிலாந்து அணி ஓரளவு ஸ்திர நிலையைப் பெற்றுள்ளது.

மூன்று விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்கள் என்ற நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து நேற்றைய ஆட்டநேர முடிவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 391 ஓட்டங்களை பெற்றுள்ளது.

பெல் 115 ஓட்டங்களையும் பீற்றர்சன் 100 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் அக்தர் , நவிட் உல்ஹசன் அப்ரிடி தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பாகிஸ்தான் முதல் இனிங்சில் 462 ஓட்டங்கள் இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## சிந்தனைக்கு



கல்வி எனும் மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து, தமிழீழத்தின் கல்வித் துறையைச் சிதைத்துவிட சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முயன்று வருகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மகிந்தவின் முதல் தெரிவு!

சிறிலங்காவின் புதிய பிரதமந்திரியாக ரட்ணசிறி விக்கிரமநாயக்க சனாதிபதி மகிந்தராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளரான டி.எம்.ஜயரட்ண பிரதமராக நியமிக்கப்படலாம் என நியமனத்திற்கு முதல்நாள் இரவுவரை நிலவிய ஊகம் பொய்யாக்கப்பட்டு ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமர் ஆக்கப்பட்டுள்ளார்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை பிரதமர் பதவிக்கு மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்தமைக்குக் காரணம் என்ன என்பது பற்றியதான சரியான காரணமோ, அன்றி பொருத்தப்பாடான ஆருடமோ இது வரை வெளிவரவில்லை. ஆனால். மகிந்த ராஜபக்ஷவின் தெரிவில் இரண்டு காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியிருத்தல் வேண்டும் என்பது நிராகரிக்கப்பட முடியாததவையாகவே இருக்கும்.

ஒன்று சனாதிபதியின் விருப்பு வெறுப்பும், மன உணர்வுகளும், இரண்டாவது மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்கு உழைத்த கூட்டணிக் கட்சியிலிருந்து எழக் கூடிய உணர்வுகள்.

சனாதிபதித்தேர்தலில், மகிந்தராஜபக்ஷ வெற்றி பெற்றால், அனுராபண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி ஏற்பார் என்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழுவின் தீர்மானம் அனுராபண்டாரநாயக்கா மகிந்தராஜபக்ஷவிற்கு ஆதரவாகத் தேர்தலின்போது உழைக்காமை காரணமாக வலுவிழந்து போய்விட்டது.

இதன்காரணமாகப் பண்டாரநாயக்க குடும்பம், தானாகவே ஒதுங்கிக்கொள்ள வேண்டியதாகிவிட்டது என்றுகூடக் கூறலாம். ஆயினும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பலம் பொருந்திய தலைவர்கள் பலர் இருக்கையில் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தெரிவு சுதந்திரக்கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் மீது சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பூரண நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படுத்துவதாகவே கொள்ளவேண்டியுள்ளது.

ஒரு புறத்தில் டி.எம். ஜயரட்ண சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பொ.ஐ. முன்னணிக்குள் பெற்றுள்ள செல்வாக்குக்கு, டி.எம்.ஜயரட்ணாவின் தனிப்பட்ட ஆளுமை, தலைமைத்துவம் என்பன மகிந்தராஜபக்ஷவிற்கு அவரை தமது இஷ்டத்திற்கு ஏற்ப கையாள முடியாது போய்விடும் என்ற உணர்வை அவருக்கு இறுதி நேரத்தில் கொடுத்திருக்கலாம்.

அடுத்தாக டி.எம்.ஜயரட்ணாவின் வருகையை ஜே.வி.பி. விரும்பாது இருந்திருத்தல் கூடும். பொ.ஐ.முன்னணியின் பலமானதொரு சக்தி அதிகாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதானது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ள ஜே.வி.பி இடையூறாகக் கருதியிருக்கலாம்.

இந்நிலையில், பலவீனமானதொரு நிலையிலுள்ள அதேவேளை தமது நிலைப்பாட்டை பிரதிபலிக்கத்தக்கவரான ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை பிரதமராக்க மகிந்தராஜபக்ஷ தீர்மானித்திருத்தல் கூடும். அதற்கு ஜே.வி.பியும் பச்சை விளக்கைக் காட்டியிருத்தல் கூடும்.

ரட்ணசிறி விக்கிரம நாயக்க கடும் கோட்பாட்டாளர் – அதாவது பௌத்த–சிங்கள பேரினவாதி என்ற பெயரினை ஏற்கனவே பெற்றவர். சந்திரிகா அரசாங்கத்தில் பிரதமராகவும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்து போரை முன்னெடுப்பதில் அதீத கரிசனை காட்டியவர். முன்னர் பிரதமராக இருந்தவேளை இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான பிரச்சாரத்தில் நேரடியாகவே ஈடுபட்டவர்.

மற்றொரு புறத்தில் அவர் நோர்வேயின் சமாதான முயற்சிகளை வெளிப்படையாகவே எதிர்த்தவர். சமாதான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே அரசுப் பிரதிநிதிகளை அவமானப்படுத்தும் வகையிலும், கண்டுகொள்ளாத வகையிலும் நடந்து கொண்டவர்.

இதேவேளை, அரசியல் ரீதியில் மிகவும் பலவீனமான நிலையிலேயே அவர் உள்ளார். கடந்த முறை பொதுத்தேர்தலில்வேட்பாளர் பட்டியலில் இவரின் பெயர் இடம்பெறவில்லை. தேர்தல் முடிந்த பின்னர் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்குத் தெரிவானவர்.

இந்நிலையில்,ஓய்வு பெற வேண்டிய வயதை ஒட்டிய ஒருவரை மகிந்தராஜபக்ஷ பிரதமராகத் தெரிவு செய்துள்ளமையானது, ராஜபக்ஷ குறித்த சில தீர்மானங்களுக்கு வரக்கூடியதான சமிக்கையைத் தருவதாகவே இது உள்ளது. அதாவது மகிந்த ராஜபக்ஷ தனக்குப் பக்கத்தில் பலமான சக்திகளை வைத்துக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை மட்டுமல்ல, இனப்பிரச்சினை விடயத்தில் ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாத சக்திகளைத் திருப்திப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளையே மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார் என்பதையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது.

# ஜே.வி.பி.இற்கு ஏற்ப மகிந்த நடக்க முயன்றால் சு.க விற்குள் போராட்டம் வெடிக்கும்

## டிலான் பெரேரா எச்சரிக்கை

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை மீறி ஜே.வி.பியினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் நிலைப்பாட்டிற்கு ஏற்ப புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்பட முனைந்தால் சுதந்திரக் கட்சிக்குள் அதற்கெதிரான போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை விடுத்திருக்கும் முன்னாள் துணையமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா, ஜே.வி.பியின் கைப்பொம்மையான மங்கள சமர வீரவிற்குப் பிரதமர் பதவி கிடைக்காததையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகவே தற்போதைய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். அதேவேளை தலைமை அமைச்சராக அநுராவை கட்சி நியமித்தது. ஆனால் கட்சியின் தீர்மானம் மீறப்பட்டுள்ளது. என்றாலும் கட்சியின் மூத்த உறுப்பினர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. டி.எம். ஜயரட்ணவும் மூத்த உறுப்பினரே. ஜே.வி.பி யின் கைப்பொம்மையான மங்கள சமரவீரவை பிரதமராகக் கருதாதது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாம் அமைச்சர், துணையமைச்சர் பதவிகளை எதிர்பார்க்கவில்லை. சிறிலங்கா கட்சியின் கொள்கைகளை பாதுகாக்கவே முன்னின்று செயற்படுவோம். ஜே.வி.பி இற்கும், ஜாதிக ஹெல உறுமயவிற்கும் புதிய சனாதிபதியை ஆட்டுவிக்க இடமளிக்கமாட்டோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மீறி தீர்மானங்கள் எடுப்பதை தடுத்து நிறுத்துவோம். தற்போது கட்சிக்குள் இது தொடர்பான விவாதம் நடைபெற்று வருகின்றது. முன்னாள் சனாதிபதி சந்திரிகாவே தொடர்ந்தும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியாக செயற்படுவார். தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்த இடமளிக்கமாட்டோம். கட்சியிலிருந்து வெளியேறும் எண்ணம் எதுவும் கிடையாது. கட்சியைப் பலப்படுத்துவதே எதிர்காலத்திட்டம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான செயற்பாடுகள் மீண்டும் தொடரின் மகிந்தவை ஆதரிப்பது குறித்துப் பரிசீலிப்போம்

## -முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன்அலி

இனப்பிரச்சினைக்கான சமாதான செயற்பாடுகளை மீண்டும் தொடங்கி அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டால் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது குறித்து பரிசீலிப்போம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஹசன் அலி கூறியதாவது,

கிழக்கிலிருக்கும் முஸ்லிம்கள் எங்களுடனே இருக்கிறார்கள் என்பதை தேர்தல் உறுதிப்படுத்தியுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பு சமாதானத்தை விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது.

புதிய சனாதிபதி சமாதான செயற்பாடுகளை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அந்தச் செயற்பாடுகள் நடைபெறவேண்டும்.

சமாதான நடவடிக்கைகள் உயிரூட்டப்படுமாயின் அதற்கு ஆதரவளிக்க முடியும். ஆனால் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கும் எந்தவொரு எண்ணமும் தங்களுக்கு இல்லை என்றார் அவர்.

# இ.தொ.கா பிரதித்தலைவர் பைஸர்முஸ்தபா கட்சியிலிருந்து விலகுகின்றார்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பிரதித்தலைவர் பைஸர்முஸ்தபா அக்கட்சியிலிருந்து விலகியுள்ளார்.

இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடனான முரண்பாட்டையடுத்து அவர் பதவி விலகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆறுமுகம் தொண்டமானுக்கு பைஸர் விலகல் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

இ.தொ.காவை ஆறுமுகம் தொண்டமான் தவறாக வழிநடத்துவதாக அந்தக் கடிதத்தில் பைஸர் முஸ்தபா குற்றம் சாட்டியுள்ளார். சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க பைஸர் முஸ்தபா முடிவெடுத்திருந்தார் ஆனால் ரணிலை ஆதரித்து அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து இ.தொ.கா வினர் வெளியேறிய போதும் பைஸர் பதவி விலகாமல் இருந்தார்.

இதையடுத்து பைஸரை கட்சியிலிருந்து நீக்குவதாக இ.தொ.கா அறிவித்திருந்தது. பின்னர் கட்சியின் முடிவையே தாம் ஆதரிப்பதாக அறிவித்து ஆறுமுகம் தொண்டமானுடன் சமாதானமடைந்தார். மகிந்த தேர்தலில் வென்றுள்ள நிலையில் இ.தொ.கா மீண்டும் அமைச்சரவையில் இணையக்கூடும் என்று கூறப்படுகிறது. இது விடயத்திலும் ஆறுமுகம்தொண்டமானுக்கும் பைஸர் முஸ்தபாவுக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டதாகவும் இதையடுத்தே பைஸர் பதவி விலகியதாகவும் இ.தொ.கா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# முத்தலிப் கொலைச் சந்தேக நபரிடமிருந்து சிறையில் கைத்தொலைபேசி ஆவணங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பில் கடும் பாதுகாப்புடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முத்தலிப் கொலை வழக்கின் சந்தேக நபரிடமிருந்து கைப்படக்கத் தொலைபேசியும் இரகசிய ஆவணங்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து சுமார் எட்டு மணிநேரம் சிறையில் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. சந்தேக நபர் தனது கையடக்கத் தொலைபேசியூடாக தகவல்களை அனுப்பிக் கொண்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேகநபரின் கூண்டில் நடத்திய சோதனையின்போது தொலைபேசியின் சிம்மையும், சார்ஜரையும் மேலும் சில ஆவணங்களையும் சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் பொருட்கள் தனக்குச் சொந்தமானவையே என்பதை சந்தேக நபர் ஏற்றுக்கொண்டுள்ளார். எனினும் அவை கிடைத்தது எவ்வாறு என்பதை இதுவரை அவர் தெரிவிக்கவில்லை. கைப்பற்றப்பட்ட இரகசிய ஆவணங்கள் மேலதிக விசாரணைகளுக்காக இரகசியப் பிரிவுப் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தச் சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவரிடமிருந்து பல முக்கிய தகவல்களைப் பெறமுடியும் என்று சிறைச்சாலை அதிகாரி டென்சில் பிரேமரத்ன தெரிவித்தார். இந்தச் சிறையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது பல சிம்கார்ட்கள், நீரைக் கொதிக்க வைக்கும் ஹீட்டர்கள், மற்றும் தொலைபேசி சார்ஜர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

# பாராளுமன்றக் கூட்டத்தொடர் 25 ஆம் திகதி மீண்டும் ஆரம்பம்

சிறிலங்கா பாராளுமன்றக் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்தது. புதிய கூட்டத்தொடர் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தொடங்கும் என்று சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசியலமைப்புச் சட்டத்தின் 70(1) பிரிவின்படி, சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கூட்டத்தொடரை முடிவிற்குக் கொண்டுவந்து புதிய கூட்டத்தொடருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்திற்காக நேற்று பாராளுமன்றம் கூடவிருந்த போதிலும் கூட்டத்தொடர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு 25 ஆம் திகதி பாராளுமன்ற கூட்டத்தொடர் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல்நாள் கூட்டத்தில் மகிந்தவின் கொள்கைப் பிரகடனம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும் அவசரகாலச்சட்டம் பற்றிய விவாதம் பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கைப் பிரகடனத்தைத் தாக்கல் செய்து பாராளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ விசேட உரை நிகழ்த்தவுள்ளார். சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இதனை அறிவித்தார்.

# மருதங்கேணி முதல் கட்டைக்காடு வரை மக்கள் படகுகளில் பயணம்

(அலுவலக செய்தியாளர்)

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி தொடக்கம் கட்டைக்காடு வரை வீதி கடும் சேதமடைந்துள்ளதனால் மக்கள் படகுகள் மூலமே பயணித்து வருகின்றனர்.

மருதங்கேணி சந்தியிலிருந்து கட்டைக்காடு வரை செல்லும் வீதி ஏற்கனவே கடும் சேதமடைந்திருந்தது. இதனை புனரமைப்பு செய்ய சம்பந்தப்பட்ட எவரும் முன்வராத நிலையில் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டு நீர் நிரம்பிக் காணப்படுவதால் அவ்வீதியினூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனையடுத்து மருதங்கேணி சந்திகண்மையில் உள்ள நீரேரியினூடாக ஆழியவளை, வெற்றிலைக்கேணி கட்டைக்காடு போன்ற 15 கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட தூரத்திற்கு மக்கள் படகில்பயணித்து வருகின்றனர். இவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவசர நோயாளர்களைக் கூட விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளதாகவும் நேற்று முன்தினம் இரவு கட்டைக் காட்டுப் பகுதியில் திடீரென சுகவீனமுற்ற சிறுமியை விரைவாக வைத்திய சாலைக்கு கொண்டு செல்லக்கூட பாதையில்லாததால் படகு மூலம் பயணித்த வேளை நோய்கடுமையாகியதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

## ஆயுதப்...

உறுப்பினர்களை நியமிப்பதற்கு முன்னர் அதன் செயற்பாடுகளை வலுப்படுத்தவும் சனாதிபதி எதிர்பார்த்துள்ளார்.

இது தொடர்பாக புதிய சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் திணைக்களத்தின் உயர் பதவிகளில் மாற்றம் செய்யவும் நடவடிக்கைகள் அடுத்து வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (32)

## மீண்டும்..

இந்த முறையும் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஓகஸ்ட் 13 ஆம் திகதி சிறிலங்கா வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து அவசர காலச் சட்டத்தை அப்போதைய சனாதிபதி சந்திரிகா பிரகடனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## மாவீரரின்...

பொறுப்பாளர் மா. ரங்கன் தெரிவித்தார். நல்லதண்ணிதொடுவாயில் இருந்து நாயாறு வரையான மாவீரர் பெற்றோர்களே கௌரவிக்கப்படவுள்ளனர். (20)

**சுகாதார..** பாடாக ஊழியர்கள் அனைவரையும் மேற்படி முகாம்களில் கடமை மேற்கொள்ளும் வண்ணம் தமிழீழ சுகாதார சேவை பொறுப்பாளர் கா. ஓவியன் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

## கிளி.,முல்லை..

குடும்பங்களும் பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவில் 510 குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளன. இவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெள்ள நீர்மட்டம் அதிகரித்ததால் பல கிராமங்களுக்குச் செல்கின்ற பிரதான வீதிகள் நீரினால் மூடப்பட்டுள்ளன.இதனால் பல இடங்கள் தொடர்பு இல்லாத நிலையிலுள்ளது. பூநகரியையும் கிளிநொச்சியையும் இணைக்கும் பரந்தன்- பூநகரி வீதயில் குடமுறுட்டி ஆறு பாய்வதால் அதனூடனான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேபோல அக்கராயன் குளத்தில் இருந்து வரும் பெருமளவான வெள்ளநீரால் அக்கராயனுக்கும் கிளிநொச்சிக்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அக்கராயன்,கோணாவில் ஸ்கந்தபுரம் வீதியிலுள்ள மரப்பாலத்தின் இருபுறமும் சுமார் 300மீற்றர் தூரம் வரை வெள்ளம் பாய்கிறது. வீதியை பாலத்தின் இருபுறமும் உடைத்து வெள்ளம் பாய்கிறது. வீதிபெரும் வாய்க்கால் போல காட்சியளிக்கிறது. அக்கராயனுக்கு செல்லும் முறிகண்டி வீதி அக்கராயனுக்கு அருகிலுள்ள ஓர் இடத்தில் பத்துஅடி உயரத்தில் நீர் மேவிப் பாய்கிறது. இதனால் அக்கராயனூடான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பெருங்குளங்களான இரணைமடு, கல்மடு ஆகியவை நீர் நிறைந்து மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இந்தக் குளங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்ற நீர் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவினூடாக செல்வதால் அங்கு அதிகபாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தால் இடம் பெயர்ந்த கிளிநொச்சி மாவட்ட மக்கள் அக்கராயன் ம.வி., மணியங்குளம் பொது மண்டபம், ஆரோக்கியபுரம் 8ஆம் கட்டைகோவில், சாந்தபுரம்பாடசாலை,பாரதிபுரம் பொதுமண்டபம், கிளி மகாவித்தியாலயம், மத்திய கல்லூரி, உருத்திரபுரம்,சக்திபுரம், இயக்கச்சிபாடசாலை, பளை பாடசாலை, குமரபுரம் பாடசாலை, நகேந்திரபுரம் பாடசாலை, கண்டாவளை ம.வி.தர்மபுரம் ம.வி,பரந்தன் ஆலயம் ஆகியவற்றில் தங்கவைக்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்களுக்கு வழங்குவதற்கு பாய், படுக்கைவிரிப்பு, நிலவிரிப்பு, தண்ணீர் போத்தல்,நுளம்பு வலை, உடுபுடவைகள் என்பவை அவசரமாகத் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் வால்கட்டு உடைப் பெடுத்து பெருவெள்ளம் பாய்ந்து வருகிறது. இதனால் கண்ணகைபுரம் கிராமம் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளது.

இதனால் வெளியேற முடியாத நிலையில் காணப்பட்டிருந்த 137 வரையான குடும்பங்களை அக்கராயன் பிரதேச காவல்துறையினரும் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினரும்,ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து மீட்டெடுத்துள்ளனர்.

அக்கராயன் குளத்திலிருந்து கலிங்கினூடாகவும் மூன்று அடி உயரத்தில்நீர் வெளி யேறிக் கொண்டிருக்கிறது .இதேவேளை முல்லைத் தீவு மாவட்டத்திலும் மழை வெள்ளத் தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ள துடன் 17460இற்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மழை வெள்ளத்தால் பல வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பல கிராமங்களுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.மாத்தளன் பொக்கணை,செம்மண் குன்று போன்ற கிராமங்களிலுள்ள மக்கள் படகுகள் மூலம் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். முல்லைத்தீவிலுள்ள அனைத்துக் குளங்களும் நீறிறைந்துள்ளன. இதனால் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். மக்களுக்கான உடனடி உதவிகள் தேவைப்படுகின்றன. வெள்ள அபாயத்தால் இடம் பெயர்ந் தமக்கள் கல்விளான் பொதுமண்டபம், யோகபுரம் ம.வி., ஆலங்குளம் பொதுமண்டபம், பாலையடி, கொல்ல விளாங்குளம், முறிகண்டி பாடசாலை உட்பட பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ.தீ)



பரந்தன்- முல்லை வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து சிறிது தூரத்தில் நேற்று வெள்ளம்பாய்ந்ததால் ஏற்பட்ட பள்ளத்தில் புதைந்துள்ள பாரஊர்தி.

## இரணைமடுக்...

பாய்வதும் குறிப்பிடத்தக்கது.

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. நேற்றுப்பிற்பகல் இரண்டு மணிவரை 34 அடி 9 1/2 அங்குலம் நீர்நிறைந்துள்ளது. குளத்தின் இடதுகரை வான்கதவுகள் ஐந்தும் நான்கு அடியும், வலதுகரை வான்கதவு ஆறும் முழுமையாகவும் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நிலையிலும் 9 1/2 அங்குலம் வான்பாய்ந்து கொண்டிருக்கிறது.

வான்கதவுகள் பதினொன்றினூடாகவும் அதைவிட வான்பாய்வதன் மூலமும் செக்கனுக்கு 13150 கன அடிநீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது. (லோ)

*– அம்பாறை அக்கரைப்பற்று சம்பவம் தொடர்பில் –*

# முஸ்லிம் பிரதிநிதிகள் — புலிகள் சந்திப்பு இறுதிநேரத்தில் ரத்து

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகனுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் நேற்று முற்பகல் நடைபெறவிருந்த சந்திப்பு இரத்து செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றுப் பிரதேசத்தில் உருவாகியுள்ள பதற்றநிலை குறித்து ஆராய்வதற்காக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரால் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் முஸ்லிம் பிரதிநிதிகள் இறுதிநேரத்தில் கலந்து கொள்ள மறுத்து விட்டதால் இச்சந்திப்பு நடைபெறவில்லை.

அக்கரைப்பற்று காவல் நிலையத்தில் கடந்த ஞாயிறு தமிழ் மற்றும் முஸலிம் பிரமுகர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் படி இச்சந்திப்பிற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பாவட்டாவில் உள்ள மாவட்ட அரசியல் செயலகத்தில இச்சந்திப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நேற்றுக்காலை அம்பாறை மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவால் முஸ்லிம் மற்றும் தமிழ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் பொருட்டு அழைத்துச் செல்ல ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் தங்களால் வரமுடியாது என்றும் இப்படியான சந்திப்பை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் அல்லது பொது இடமொன்றில் ஏற்பாடுசெய்து தருமாறு அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் இறுதி நேரத்தில் கோரிக்கையை முன்வைத்தது.

விடுதலைப்புலிகள் அவர்களது கட்டுப்பாட்டுப்பகுதிக்கு அப்பால் வருவது தொடர்பாக எதிர்நோக்கும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டியபோதிலும் இதனை முஸ்லிம் தரப்பு ஏற்கமறுத்து விட்டது.

இருப்பினும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிற்கும் தயாமோகனுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் அக்கரைப்பற்று பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து ஆராயப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் உட்பட தமிழ் பிரமுகர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இச்சந்திப்பில் விரிவாக எடுத்துக்கூறிய தயாமோகன், முஸ்லிம்கள் இது தொடர்பாக தமது அமைப்பின்மீது கொண்டுள்ள சந்தேகம் அர்த்தமற்றது என்றும் குறிப்பிட்டார்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கலவரத்தை தூண்டும் சதி நடவடிக்கையின் ஓர் அங்கமே இது என்றும் சுட்டிக்காட்டிய அவர் முஸ்லிம்பிரதிநிதிகள் தங்களுடன் இது பற்றிப் பேச முன்வரும் போது உண்மையான ஆதாரங்களுடன் கூடிய சில தகவல்களை அவர்களிடம் தங்களால் தெரிவிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். தயாமோகனின் இந்தப் பதில் நேற்று மாலை பள்ளிவாசல் சம்மேளனத்திற்கு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாவு அறிவித்தல்



## இராசையா அரசகேசரி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் செல்வாநகர் கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராசையா அரசகேசரி (பிரதம எழுதுநர் பிறப்பு, இறப்பு பதிவகம் கச்சேரி கிளிநொச்சி) அவர்கள் 22.11.2005 நேற்று (செவ்வாய்க் கிழமை) காலமானார். இவர் இராசையா (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், செல்வாநகரில் வசிக்கும் கந்தசாமி, சிவமணி ஆகியோரின் அன்பு மருமகனும், இராதாமணியின் அன்புக்கணவரும் கோபிராகவன், (பாண்டியன் சுவையூற்று நடுவப்பணியகம் விசுவமடு), கோகுலராகவன் (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ 2ஆம் வருடமாணவன்), கோசலருபினி, ஆதவன், மாதவன், ஆர்திகா (கிளி/கனகபுர மகாவித்தியாலய மாணவர்கள்) மாதுரி, (ஸ்ரான்லி கல்லூரி மாணவி), ஆருஜன் ஆகியோரினது அன்புத் தந்தையும். திரு.இ.கருணாகரன் (ஆசிரியர் யாழிமையான் அ.த.க வித்தியாலயம்), திரு.இ.மதிகரன் (மின்இணைப்பாளர் யாழ். பல்கலைக்கழகம்), திருமதி. தேவகி பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மணிவாசன் (அல்வாய்), மணிவண்ணன் (லண்டன்), மணிமாறர் (ஜேர்மன்),வரதா(முன்பள்ளி ஆசிரியை தென்னிந்திய திருச்சபை, சாலோம் நகர்), கீதா தட்டெழுத்தாளர் (உள்ளூராட்சி திணைக்களம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணம் அரியாலை புங்கங்குளம் சந்திக்கு அருகாமையில் உள்ள நொத்தாரிசு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (23.11.2005) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:–
குடும்பத்தினர்.

(6949)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.